Registered No. M. 878

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 5. | 1914வரு ஆகஸ்டுமீ 15உ
ஆநந்தவரு ஆடி மீ 31உ | பகுதி 4

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S., பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.
(CONTENTS)

பக்கம்

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 121
From the Editor—A. Rangaswami Iyer

2. ஆத்மபோதம்—யோகி சுந்தரராஜம் 129
Atmabodham—Yogi Sundararajam

3. அஹல்யா சாப விமோசனம்—ஆர் ஸ்ரீநிவாஸஐயர் M. A. 137
The Curse of Ahalya discharged—R. Srinivasier M. A.

4. குழந்தைகட்குப் பிரஹ்மஞ்ஞானம் போதித் ல் —R. பஞ்சாபகேச ஐயர் 142
Theosophy for Children—R. Panchapakesier

5 மனிதனும் கடமையும்—தி. ராம. மு. சுப்பராம ஐயர் 153
Man and his duties—T. RM. M. Subbaramier.

6. புத்தக வரவு 159
Review of Books

7. சமாசாரம். 159
News

Do you like to make your home happy?

If so,

Please subscribe

Female Education.

It educates
It enlightens

Subscription Rs 2—8—0 per annum

If you have not seen before, send one anna for sample cpoy.

Manager,
'FEMALE EDUCATION'
Madras E.

ॐ

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5. | 1914 ௵ ஆகஸ்டு ௴ 15 ௳ / ஆநந்த ௵ ஆடி ௴ 31 ௳ | பகுதி 4.

தற்கால நிலைமை.

1914 ம் ௵ முதல் 1921 ம் ௵ வரை அடுத்த 7 வருஷங்களுக்கு பிரஹ்மக்ஞான சபையின் அக்கிராஸனத்தை வகிக்க மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் அச்சபை மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். உலக முழுவதும் பரவி ஆத்மவிசாரத்தைக் கைக்கொண்ட பிரஹ்மக்ஞான சபைபோன்ற சபை வேறொன்றுமில்லை. பௌதிக சாஸ்திர சபைகள் அநேகமிருக்கின்றன. அவைகள் பிரஹ்மக்ஞான சபை போல ஆகமாட்டா. இச்சபையின் அக்கிராஸன சம்பந்தமாக அடியில் கண்ட பிரகாரம் வோட்டுகள் கொடுக்கப்பட்டன. உலக முழுவதும் இருக்கும் சபை மெம்பர்களில் 17,446 மெம்பர்கள் வோட்டுக் கொடுத்தார்கள். அவர்கள் 17,211 மெம்பர்கள் அம்மையாரவர்கள் அக்கிராஸனத்தை வகிக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். 235 பேர்கள் விரோதமாய் வோட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

* * *

இவ்வோட்டுகளால் இச்சபை பலதேசங்களில் பரவிக்கொண்டு வருந்தன்மையும், அச்சபையோர்கள் அவர்களது அக்கிராஸனாதிபதியவர்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் விசுவாஸமும் கௌரவமும் நன்கு விளங்கும். சென்ற ஏழு வருஷங்களில் நமது அக்கிராஸனாதிபதியவர்கள் முயற்சிகளால் இச்சபையானது பிரதானமான நிலைமையில் வந்ததுமல்லாமல் நமது பூர்வீக சார்வாக மதத்திற்கு ஒப்பான தற்கால நாஸ்திக மதக்கோட்பாடுகளை அவைகள் மறுபடியும் துளிர்க்கா வண்ணம் கண்டித்தும் உலகத்தின் தற்கால மனோபாவங்களை மேல் நோக்கிச்செல்லும்படி அவைகளின் கதியை மாற்றியும் இருக்கிறார்கள்.

***

இனி அடுத்த ஏழு வருஷங்களில் இச்சபையானது மனிதர்களுடைய மனதை ஞான மார்க்கத்தில் பக்குவப்படுத்துவதை நாம்பார்ப்பதுமல்லாமல், உலகத்திற்கு க்ஷேமகரமான பல பிரவர்த்திகளில் இச்சபையின் முயற்சிகளை நாம் விசேஷமாய்ப் பார்க்கப் போகின்றோம். பூர்வகாலத்தில் ஒருவன் ஆத்ம விசாரம்செய்து ஈசுவரனுடைய சந்நிதானத்தை அடையவேண்டுமானால் அவன் குடும்பத்தைத் துறந்து காட்டிற்குச் சென்று குருவை அடைந்து கந்த மூலாதிகளை உண்டு சரீரத்தை ஒடுக்கி கோரமான தபஸ்களைச் செய்து வந்தானென்று நம்முடைய பூர்வீக கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பாஹ்யமான தோற்றங்களாலே அவன் முக்கியமாய் 'துறவி' என்று சொல்லப்பட்டான். தற்காலத்தில்பஹிர் வேஷங்களால் ஒரு மனிதனுடைய அந்தரங்க சுபாவங்கள் அறியத்தக்கனவல்ல. நகரங்களில் ஜனசமூகங்களில் நின்றுகொண்டு அவர்களைப் போல் லோக ரக்ஷணார்த்தமான பிரவிர்த்திகளில் பிரவேசித்து ஜகத்குருவின் அவதாரத்தை எதிர்பார்த்து அவரையும் அவரது போதனையையும் ஏற்றுக்கொள்ளத் தக்கவாறு உலகத்திலுள்ள ஜனங்களையும் அவர்களுடைய மனோக்கங்களையும் அவர்களுடைய பிரவிர்த்திகளையும் அமைப்பதே ஸந்நியாஸத்தை அந்தரங்கத்தில் கைக்கொண்டதாகும்.

***

இதுவரையில் நாஸ்திகக் கொள்கைகளைக் கண்டித்து ஐம்புலன்களுக்கு கோசரமில்லாத உலகங்களும் சிருஷ்டி வர்க்கங்களும் இருக்கின்றனவென்று ஸ்தாபித்து மனிதனுடைய விகாஸ முறையானது அடியில் ஸ்தாவர வர்க்கங்களும் கீழான வர்க்கங்களிலிருந்து மேல் நோக்கிச்சென்று ரிஷிகள் மஹாத்மாக்கள் தேவர்கள் முதலான நமது ஸ்தூல திருஷ்டிக்குத் தோன்றாதவர்களுடைய உன்னத ஸ்தானத்தை அடைந்து ஈசுவரனைச் சேரலாமென்பதை நிலைநிறுத்தி, அவ்வித விகாஸ முறையில் மேல் நோக்கிச் செல்லுவதற்குரிய ஸாதனங்களைத் தெளிவாய் மனிதர்கள் அறியுமாறு விளக்கின பிறகு, பிரஹ்மஞ்ஞான சபையும் அதைச்சேர்ந்தவர்களும் அவ்வடிப்படையின்மீது மேல் கட்டிடங்களாகிய நமது தேசத்தின் ராஜாங்க சம்பந்தமான சீர்திருத்தங்கள், ஆசார சம்பந்தமான சீர்திருத்தங்கள், கைத்தொழில்வியாபாரம் முதலியஐசுவரியாபிவிருத்திக்குரிய பிரவிர்த்திகள் இவைகளில் ஊக்கத்துடன் பிரவேசித்தலானது சாவதானமாகவும் நன்மையைப் பயக்கத்தக்கதாகவும் இருக்கிறது.

***

சென்ற ஜனவரிமீ முதல் 'பொதுநன்மை' (Commonweal) என்னும் பத்திரிகையானது வாசம்தோறும் பிரசுரம் செய்யப்பட்டு வருகின்றது. நமது சபை அக்கிராஸனாதிபதியவர்கள் சென்னையில் சென்றமீ 11௳ வந்திறங்கினார்கள். அடுத்த 14௳யில் சென்னையில் தினந்தோறும் பிரசுரஞ்செய்யப்பட்டு வந்த 'Madras Standard' என்ற பத்திரிகையானது அவர்களால் கிரயத்திற்கு வாங்கப்பட்டு அன்றையதினம்முதல் அவர்களால் பத்திராதிபராக இத்தேசத்தின் நன்மையின்பொருட்டு நடத்திவரப்படுகிறது. இந்தியாவில் பிரசுரமாய்வரும் எல்லாப் பத்திரிகைகளிலும் அது ஒரு உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும் என்பதில் ஐயமில்லை. பிரஹ்மஞ்ஞானத்தைத் தழுவின கர்ம மார்க்கத்தைப்போல் மற்ற கர்ம வழிகள் நன்மையை கொடுப்பதற்கு சக்தியற்றவைகள்.

***

சென்ற மீ 9உ முதல் மதுரையில் அத்வைத சபை கூடிற்று. பல ஊர்களிலிருந்து வித்வான்கள் வந்து மரியாதை செய்யப்பட்டும், அவர்களில் பிரதானமானவர்கள் பிரயோஜனகரமான சில உபந்நியாஸங்கள் செய்தனர். முதல் நாள் சிதம்பரத்திலிருந்து வந்திருந்த பிரஹ்மஸ்ரீ மஹா மஹோபாத்தியாய ஹரிஹர சாஸ்திரியாரவர்கள் சந்தியோபாஸனம் என்ற விஷயத்தை உபந்நியஸித்தார். அதில் ஸநாதன தர்மத்திற்குப் பெருமையைக் கொடுக்கிற அநேக தத்துவங்களைத் தெளிவாக எடுத்துக்கூறினர். பிராதஸ்நானம் என்பது சரீர ஆரோக்கியத்திற்கு முக்கியமானதென்றும் அதை அனுஸரித்தும் மித ஆகாரத்தை உண்டும் நம்முடைய முன்னோர்கள் அதி வார்த்திக தசைபரியந்தம் சரீர வலிமையையும் ஆரோக்கியத்தையும் அடைந்து வந்ததை நாம் பார்த்திருப்பதுமல்லாமல் அவர்களுடைய சந்ததியைச்சேர்ந்த நவீன காலத்தவர்கள் அச்சுகாதாரக் கொள்கைகளை அனுஸரிக்காமல் வியாதிகளால் வருந்துவதையும் ஆயுள் குறைவு நேரிடுவதையும் சொல்லி சந்தியோபாஸனத்தில் முக்கியமான பாகங்களான 'அர்க்கியம்' அதற்குப் பிறகு சூரியமண்டலத்திலிருக்கும் தேஜஸுக்கும் இருதய குகையில் உள்ள தேஜஸுக்குமிருக்கும், ஐக்கியத்தைக் காட்டக் கூடிய 'வாக்கியம்,' 'காயத்திரி ஜெபம்,' 'உபஸ்தானம்' இவைகளில் ஒவ்வொன்றும் மற்றவைகளைக் காட்டிலும் முக்கியமென்றும் ஒவ்வொரு கிரந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதென்றும்,

* * *

பிரணவத்தின் மாத்திரைகளில் முதல் மாத்திரை ரிக்வேத ஆரம்பத்திலும், இரண்டாவது யஜுர்வேதத்தின் மத்தியிலும், மூன்றாவது சாமவேதத்தின் அந்தத்திலும் வருகிறதென்றும் இம் மாத்திரைகளுக்கும் பூ, புவர்ஸுவர் என்ற வியாகிருதிகளால் காட்டப்படுகிற மூன்றுலோகங்களுக்கும் உள்ள சம்பந்தத்தை எடுத்துக் காட்டி, இரண்டு சந்தியாகாலங்கள் மாத்தியாஹ்னிக காலம் இவைகளின் முக்கியத்தைக் குறித்தும் அந்த காலங்களில் உபாஸிக்கவேண்டிய தேவதைகளைக் குறித்தும் சொல்லி இவ்விதமாக தபஸினாலும் ஸ்வாத்யாயத்தினாலும் நிஷ்டையினாலும் ஏற்படுகிற பலமே பிரஹ்ம

பலமென்றும் இப்பலத்தை க்ஷத்திரியனுயிருந்த விசுவாமித்திரர் வசிஷ்டருடன் போர்புரிந்து தோல்வி யடைந்தபோது கொண்டாடி க்ஷத்திரிய பலத்தைத் திரஸ்கரித்தன ரென்றும், இந்த பலமெல்லாம் லோக க்ஷேமார்த்தமாக உபயோகிக்கப்பட வேண்டுமென்பதை காட்டுவதற்காக ஒரு பிராஹ்மணன் தன்னுடைய சந்தியோபாஸனத்தால் கிடைத்த யோகபலத்தில் ஒரு பாகத்தை தத்தம் செய்து மலையாளத்தில் சம்பாதித்த தனத்தை திருநெல்வேலி ஜில்லாவில் செழிப்புப்பெற கன்னடியன் கால் என்ற ஜனசமூகத்திற்கு வெகு பிரயோஜனகரமான கால்வாயை வெட்டினு ரென்ற கதையைச் சொல்லி உதாரணமாகக் காட்டினுர். இது போலவே ஸ்ரீராமானுஜாசாரியர் தமக்குத் தம்முடைய ஆசாரியரில் ஒருவராகிய திருக்கோஷ்டியூர் நம்பிகள் பிறர்க்குச் சொல்லக் கூடாதென்று வற்புறுத்தி உபதேசித்தருளிய மகா மந்திரத்தை எல்லா ஜனங்களுமறிந்து உஜ்ஜீவிக்குமாறு அவ்வாசாரியரின் ஆக்ஞைக்கு விரோதமாக பகிரங்கமாய் வெளிப்படுத்தினுரென்றும் அவ்வாசிரியர் இவ்வாறு வெளிப்படுத்தினதைக் கண்டித்த போது தனக்கு எக்கேடு நேரினும் உலகத்தோர் அக்காரியத்தால் க்ஷேமமடைந்தால் அது தனக்குப் போதுமென்று சொன்னதாகவும் அவ்விடையை அவ்வாசாரியர் அங்கீகரித்து அவரைத் தழுவிக் கொண்டதாகவும் அவ்வைஷ்ணவ ஆசாரியர் சரித்திரத்தில் கூறப்படுகிறது.

*
* *

அத்வைத சித்தாந்தத்தின் தத்துவங்கள் நவீன காலங்களில் பச்சிமதேசங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிகளால் உறுதியை அடைந்திருக்கின்றன. உலகத்தில் பல சக்தி வேறுபாடுகள் கடைசியில் ஒரே சக்தியின் பரிணுமங்களாக ஏற்படுகின்றன வென்றும் Physical Science என்ற பௌதிக சாஸ்திரம் கூறுகின்றது. நமது தேசத்தில் வங்காள ராஜதானியிலிருக்கும் உலகப்பிரசித்தி பெற்ற ஜகதீச சந்திர போஸ் என்றவர் அவருடைய பௌதிகசாஸ்திர ஆராய்ச்சிகளால் மனிதன், பிராணி, செடி ஸ்தாவரம் முதலியவைகளில் நிற்கும் பிராணன் ஒன்றுதான் என்பதை நம்முடைய புலன்கள் அறியத்தக்க விதமாய்

ஸ்தூல பரீக்ஷைகளால் ஸ்தாபித்திருக்கின்றனர். அத்வைத சித்தாந்தத்தை சுருதி வாக்கியங்களாலும் யுக்தி வாதங்களாலும் ஸ்தாபிப்பதோடு நவீன பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிகளாலும் ஸ்தாபித்தலும் மிக உபயோகமுள்ளதாகும்.

* * *

அத்வைத சித்தாந்தத்தின் முக்கிய பிரயோஜனம், அதை விவேகப் பயிற்சிக்கு மாத்திரம் ஏற்பட்ட ஒரு முறையாகக் கருதுவதனால் ஆகக் கூடியதல்ல. அது ஈசுவரனை அடைவதற்கு ஓர் வழியாக ஏற்படவேண்டும். அவரை அடைவதற்கு கருமம், பக்தி, ஞானம் என்ற மூன்று மார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. துவைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்கள் பக்தி மார்க்கத்தை பிரதானமாக வற்புறுத்தியும் அத்வைத சித்தாந்தம் ஞானமார்க்கத்தை விளக்குவதாகவும் நாம் கொள்ளலாம். எல்லா ஜீவர்களும் ஈசுவரனிடமிருந்து தோன்றியவர்களென்றும் ஈசுவரனுடைய அம்சமென்றும் நாம் அறிந்தால் சரீரங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட த்வேஷம் முதலிய வேறுபாட்டைச் செய்கின்ற துர்க்குணங்கள் நம்மிடம் குடிகொள்ளத் தக்கவையில்லை. பகவத் கீதையில் பகவானால் அசுரசம்பத்துக்கள் என்று சொல்லப்படுகிற குணங்கள் நம்மிடம் தோன்றத் தக்கவையல்ல.

* * *

துவைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களைக் கைக்கொண்டிருக்கிற மதஸ்தர்களைக் காட்டிலும் அத்வைத சித்தாந்தத்தைக் கைக்கொண்டிருக்கும் மதஸ்தர்கள் ஐக்கிய பாவத்திலும் தங்களுடைய காரியங்களில் மற்றவர்களுடைய நன்மையைத் தங்களுடைய நன்மையைப் போலக் கருதும் குணத்திலும் சிறந்தவர்கள் போல் காணப்படவில்லை. விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை அனுஸரித்து பிரபத்தி மார்க்கத்தைப்பிரதானமாய்க் கைக்கொண்டு ஈசுவர கைங்கரியத்தில் எனது உனது என்ற வேறுபாட்டை ஒழிப்பதற்குப் பதிலாக தென்கலை வடகலை என்ற கக்ஷிவாதங்கள் நியாயஸ்தலங்களில் அதிகப் பொருட் செலவின் பேரில் வேரூன்றி வருவதை

நாம் காணுகின்றோம். அத்வைத சித்தாந்தத்தைக் கைக்கொள்வோருக்குள்ளும் ஐக்கியமின்மையை நாம் விசேஷமாகக் காணலாம். இச்சித்தாந்தங்களில் உண்மைகளை நமது யுக்திவாயிலாக மட்டும் பார்ப்பதால் இக்குறைகள் ஏற்படுகின்றன. அவைகள் ஆத்மதரிசனத்திற்காக ஏற்பட்ட மார்க்கங்கள் என்று அறிந்து அவைகளின் தத்துவங்கள் நமக்கு சாக்ஷாத்காரமாக ஏற்படின் துவேஷத்திற்குக் காரணமாகிய பிரத்யேகத் தன்மை விலகி ஐக்கிய பாவம் அதிகரித்து துக்க நிவாரணத்திற்கு ஹேதுவாகும்.

***

நல்வழிக்கும் அத்வைத மதத்திற்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தம் (The Ethical Aspect of Adwaita) வற்புறுத்தத் தக்கது. அத்வைத சபையாகிய இச்சபையானது உபந்நியாஸங்கள் மூலமாகவும் வித்வான்களுக்கு வெகுமதி கொடுப்பதன் மூலமாகவும் மிக விமரிசையாய்க் கொண்டாடப் பட்டது. மதுரை தர்ம சாஸ்திர சபையோர்களினுடைய முயற்சியால் அச்சபை இந்நகரில் கூடி முடிவு பெற்றமையால் அக்கௌரவம் தர்ம சாஸ்திர சபையோரைச் சேர்ந்தது.

***

மதுரை ஜெயிலில் சிறையுண்டிருக்கும் கைதிகளுக்கு மதவிஷயங்களைப் போதிக்க, மதுரை பிரஹ்மஞான சபையில் சிரத்தையுள்ள அங்கத்தினர்களும் பென்ஷன் தாசில்தார்களும் உலக அனுபவம் பொருந்தினவர்களுமான மகாா-ா-ஸ்ரீ N. ஸ்ரீநிவாச ஐயரவர்களும், K. S. ராமசந்திர ஐயரவர்களும் கவர்ன்மெண்டாருடைய அனுமதியுடன் சென்றமீ 26உ, அவர்கள் ஏற்றுக்கொண்ட கைங்கரியத்தை ஆரம்பித்தார்கள். "கர்மபலத்தை அனுபவித்தல் வேண்டும்" என்ற நீதியானது நமக்கு கஷ்டம் துக்கம் வருங்காலத்தில் நமது மனதைத் தேற்றிப் பொறுமையோடு சகிக்கச் செய்வதற்கு அநுகூலமாயிருந்த போதிலும், அத்தத்துவத்தை நன்கறியாதவர்கள் தங்கள் துக்கம் நிவாரணமின்றி அநுபவிக்கப்படுவது அந்நீதிக்கு ஒத்ததாகும் என்று விபரீத அர்த்தங்கொண்டு உலகத்திலுள்ள

தூக்கத்தையும் அவிவேகத்தையும் நீக்குவதில் உற்சாகமில்லாதவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் கர்ம நீதியைக் கைக்கொள்ளாத மேற்றிசையோர்களைப் போல் விபாதிஸ்தர்களுக்கு தர்ம வைத்திய சாலைகள் ஏற்படுத்துவதிலும் சிறைச்சாலையிலுள்ளவர்களுக்கு அவிவேகத்தைப் போக்கடித்து கெட்டவழிகளினின்று விலகி சன்மார்க்கத்தை அனுஸரிக்கும்படி செய்வதிலும் இன்னும் பலவிதங்களால் தடுமாறிச்செல்லுபவர்களுக்கு நேர்வழியைக் காட்டுவதிலும் நாம் இவ்வளவு காலம் தீவ்ரமாய் முயற்சிக்கவில்லை.

***

மகா-ா-ா-ஸ்ரீ N. ஸ்ரீனிவாச ஐயரவர்களும் K. S. ராமச்சந்திர ஐயரவர்களும் பிரதமமாக போதித்த விஷயங்களை மதுரைச் சிறைச்சாலையிலுள்ள கைதிகள் கவனித்துக் கேட்டனர்களென்றும் அங்கிருக்கும் ஜெயிலரும் அவ்விஷயங்களில் பற்றுள்ளவராக விருக்கின்றனரென்றும் அவர்கள் ஏற்றுக் கொண்ட வேலையானது பிரயோஜனத்தைக் கொடுக்கத்தக்கதென்றும் நாம் கேட்க சந்தோஷமடைகின்றோம்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

நன்மொழி.

மனத்தி லெழுந்ததோர் மாயக்கண் ணாடி
நினைப்பி னதனி னிழலையுங் காணார்
வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்
புறக்கடை யிச்சித்துப் போகின்ற வாறே.

125 125

ஆத்மபோதம்.

(4-ம் தொகுதி 443-ம் பக்கத் தொடர்ச்சி.)

சச்சிதானந்த யோகீந்திரர்:—சிஷ்யர்காள்! நேற்று பிரஹ்லாதர் அப்பியஸித்த மார்க்கத்தைப் பற்றி ஒருவாறு சொன்னேன். அது நீங்கள் முதலில் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமான சில கோட்பாடுகளையும்* அபிப்பிராயங்களையும் காட்டுவதுடன் அப்பியாஸ மார்க்கத்திலுண்டாகும் அநேக சித்திகளின் உற்பத்தியையும் நன்கு விளக்கியிருக்குமென நம்புகிறேன். இனியும் பக்தியின் அப்பியாஸ மார்க்கத்தைப் பற்றி சர்வலோக சரண்யனான ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகவத் கீதையில் அமிருத வருஷம் போற் சொல்லியிருக்கிறார். ஆகையால் அவற்றின் தத்வார்த்த தாத்பரியங்களை நன்கே விசாரித்துத் தெரிந்து கொண்டு பிறகு மஹான் லோககுரு சங்கருடையவும் இன்னும் மற்ற மஹான்களுடையவும் மார்க்கத்தை சிரவணம் செய்வது உங்களைப்போன்ற பக்ஷிகளுக்குப் போதுமானதாகையால் நன்கே கவனியுங்கள்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதாசாஸ்திரத்தைச் சொன்னது அர்ச்சுனனுக்கு மாத்திரமல்லாது உலகத்து அதிகாரி நிலைமை அடைந்த யாவருக்கும் பயன்படவே. ஆனால் இப்படிப்பட்ட உத்கிருஷ்ட நூல்களை அதிகாரியல்லாதவர்கள் அப்பியஸிக்கத் தொடங்குவதினாற்றான் மேற்சொல்லிய சாஸ்திரங்களின் முடிவான பலன் கிடையாமலேயே போய்விடுகிறது. அடியில் காட்டியிருக்கும் வாக்கியத்தின் தத்வார்த்தத்தைப் பார்க்க அக்கருத்து நன்கு விளங்கும்.

ரிக்தஹஸ்தேந நோபேயாத் ராஜாநம் தைவதம் குரும்

தத்வராயன்:—ஹே! ஞானசத்குருவே! மேலே சொல்லிய வாக்கியமானது அதிகாரிகளைப்† பற்றி யாதொன்றும் சொல்லாது, ராஜா, தெய்வம், குரு ஆகிய இம்மூவர்களையும், ஒருவன் வெறுங் கையோடடையலாகாதென்று மாத்திரம் சொல்வதாகத் தெரிகிறது. ஆகையால் இவ்வாக்கியத்தின் தத்வார்த்தத்தையும் விளங்கச்சொல்லவேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

---

* கோட்பாடுகள் - விதிகள், நியமங்கள்.

† அதிகாரி மேன் முறைகளை யநுஷ்டிக்கும் பக்குவத்தை யடைந்தோன்

யோகி:—நல்லது கவனியுங்கள். முன் சொல்லிய வண்ணம், ஒருவனடைய முயற்சிக்கும் இன்பம், ஐஹிகம், ஆமுஷ்மிகமென இருவிதமே. இவைகளை ராஜாவையும், தெய்வத்தையும் கொண்டு முறையே அடைகிறான். ஆனால் அங்ஙனமடைய வழி காட்டுவோனாகிய குரு இன்றியமையாத ஸாதனமாகையால், குருவை யடைந்து மேன் மார்க்கத்தை யப்பியஸிப்போனாகி ஆமுஷ்மிக பலனையடைகிறான். "இவர்களை வெறுங்கையோடடையலாகாது" என்ற விடத்து, ராஜாவை யடையுங்கால், இஹ லோக சம்பந்த அறிவுடனும், குருவை யடையுங்கால் ஸாதன சதுஷ்டயத்துடனும், தெய்வத்தை யடையுங்கால் பக்தியுடனும் அடைய வேண்டுமென்பது கருத்து. அதாவது ஒருவன் ராஜாவினால் ஒரு பிரயோசனத்தை யடைய வேண்டுமானால் இவ்வுலகத்துக்குரிய படிப்பின் தேர்ச்சி முக்கியம்; குருவினாலடைய வேண்டிய பிரயோஜனத்துக்கு மேற்சொல்லிய * சாதன சதுஷ்டயம் முக்கியம்; ஏனென்றால், குருவை யடைய மனத்தின் பக்குவம் முக்கியமானதென்றும், ஆசாரியன், சிஷ்யனுக்கு மனத்தினாலேயே உபதேசிக்கிறார் ஆகையாலும், அங்ஙனமடையாத குருவைத்தேடுபவன் யாதொரு சித்தியையும். அடையான் என்றும் அடியில் காட்டியிருக்கும் சுலோகம் நன்கு விளக்கிக் காட்டும்.

வித்வாம்ஸோ தேசிகேந்த்ரா வ்யஜ்ஞாஸ்ஷிஷ்யா மஹாம்ஸ பூர்ணா:।
மாஸோஸ்ஸௌரபம் வ்யாவ்யா நம் ஸிஷ்யாஸ்ஸ்ஹிதஸம்ஸயா:॥

தெய்வத்தையடைய மனத்தின் பக்குவத்தின்மேல் உண்டாகும் பக்தி இன்றியமையாத சாதனம். ஏனென்றால்,பக்தியினாலன்றி வேறு எவ்விதசாதனங்களாலும் ஒருவன் தெய்வத்தையடைய முடியாதென்பது நமக்கு அநுபவ சித்தமாயிருப்பதுடன் மஹா வரகவியாயும், சாக்ஷாத் ஸரஸ்வதிதேவியே,நீயே நான்,நீயே நான், என்று மனமகிழ்ந்து சொல்லப்பெற்றவருமான, காளிதாஸ கவி எழுதிய சுலோகமும் நன்கு விளக்கிக்காட்டும்.

---

* சாதன சதுஷ்டயம் - விவேகம், வைராக்கியம், ஷட்ஸம்பத்தி, முமுக்ஷுத்துவம்.

वेदान्तेषु यमाहुरेकपुरुषं व्याप्य स्थितं
रोदसी
यस्मिन्नीश्वर इत्यनन्यविषयः शब्दो यथार्थाक्षरः।
अन्तर्यश्च मुमुक्षुभिर्नियमितप्राणादिभिर्मृग्यते
स स्थाणुः स्थिरभक्तियोगसुलभो निःश्रेयसायास्तु वः॥

இச்சுலோகத்தின் தாத்பரியத்தைப் பார்க்க, வெளிவிர்த்தியை ஒடுக்கி உள்நோக்கின விர்த்தியை யுடையவர்களாலும், மோக்ஷ இச்சையை யுடையவர்களாலும், பிராணனை அடக்கினவர்களாலும், பகவான் தேடப்படுவதாயும், ஆனல் பக்தியோகத்தினல் மாத்திரம் இலேசாய் அடையப்படும் சாஸ்வத புருஷனென்றும் நன்கே நமக்கு விளங்குகின்றன. ஆகையாற்றான் மேலே சொல்லியபடி அநுஷ்டிக்காத, அதிகாரி யல்லாத ஜனங்கள் யாதொரு பலனுமடைகிறார்களில்லை.

தத்வ:—ஹே! கருணாநிதே! மேற்சொல்லிய வாக்கியத்தின் தத்வார்த்தத்தை நன்கே கவனித்துணர்ந்தோம். ஆனல் அதிகாரி யல்லாத ஜனங்கள் அப்பியஸிக்கும் விதத்தையும் சுருக்கமா யநுக்கிரஹிக்கப் பிரார்த்திக்கிறோம்.

யோகி:—அப்பனே! கேள். புஷ்பஹாரம், எலுமிச்சம்பழம் முதலியவற்றால் ராஜாவையும், கேவலம் பணத்தினல் குருவையும், புஷ்பம், தாம்பூலம், தேங்காய் பழம் முதலியவற்றால், தெய்வத்தையும் அதிகாரி யல்லாத ஒருவனடைகிறான். இவை முடிவான பலனைக் கொடுக்கச் சக்தியில்லாத நிமித்தம் அதனைப் பெறாது திரும்புகிறான். இதுவே பரா பக்தி எனப்படும். இதுவும் ஒரு தசையில் முக்கியந்தான். இதற்கு ஸர்வ ஆதாரமாக, மேற் சொல்லிய ஜனங்களால் அநுஷ்டிக்கப்படும் விதம்அடியிற்காட்டியிருக்கும் கீதா சுலோகத்தின் ஸ்தூல* சூக்ஷ்ம† தாத்பரியங்களைக் கேட்க உங்களுக்கு நன்கு விளங்கும். ஆகவே நன்றாய்க் கவனியுங்கள்.

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति।
तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः॥

*ஸ்தூலம் - வெளிப்படையான. †சூக்ஷமம் - ரகசியமான.

"எவன் இலை, புஷ்பம், பழம், ஜலம் இவற்றை எனக்கு பக்தியோடு கொடுக்கின்றானோ (அந்த) பரிசுத்த புத்தியுள்ளவன் பக்தியோடு அர்ப்பித்த அதனை யான் புஜிக்கின்றேன்"

யோகி:—இதுவே அச்சுலோகத்தின் ஸ்தூலம் அல்லது வெளிப்படையான தாத்பரியம். இதன் சூக்ஷ்மார்த்த தாத்பரியம் பக்தியின் அப்பியாச மார்க்கத்தை நன்றாய் விளக்கிக் காட்டும்; தவிர இதற்கே புராணத்தை ஆதாரமாகக் கொண்ட ஒரு தாத்பரியமுமுண்டு. அது பக்தியை அப்பியசித்த அநேக உத்தமர்களுடைய வழியைக் காட்டும். இது சிரவணத்துக்கு முக்கியமான அங்கமாகையால் அதனை சலியாத மனத்துடன் உணர்வீர்களாக.

முன்னொரு காலத்தில் பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செய்யுங்கால், இவர்களை வேரோடு நாசஞ் செய்ய சதா முயற்சித்துக் கொண்டிருந்த துர்யோதனனென்பவன், துர்வாச மஹரிஷியை தன் தேசத்தில் கொண்டு வந்து வைத்து அம்மஹானைப் பலவிதத்திலும் சந்தோஷப்படுத்தி அவரிடத்தில் ஒரு வரம் கேட்டான். அதாவது நடுநிசியில் பஞ்சபாண்டவர்கள் வசிக்கும் வனஞ் சென்று தனக்கும் தனது ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கும் உணவு அளிக்கும்படிக் கேட்க வேண்டுமென்பது. ஏனென்றால் பஞ்சபாண்டவர்கள் அப்படிப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்ற முடியாதவர்களென்றும், அதினால் துர்வாச மஹரிஷி அவர்களை நிச்சயமாய் சபித்துப் போடுவாரென்றும், அவர்கள் அங்ஙனமே நாசத்தையடைவார்களென்றும், ஆகவே தானும் தன் இனத்தாரும் சுகமாய் வாழலாமென்றும் எண்ணினான். துர்வாச மஹரிஷியும், பாபியினுடைய அன்னம் சாப்பிட்டதின் நிமித்தம், அறிவையிழந்து அவ்விதமே ஒப்புக்கொண்டு அவனுக்கு வரமளித்தார். பிறகு அதைப் பூர்த்திசெய்யும் பொருட்டு பஞ்சபாண்டவர்களிருந்த வனத்துக்கு நடுநிசியில் வந்து தனக்கும் தன் சிஷ்ய கோடிகளுக்கும் போஜனம் செய்து வைக்கும்படி பஞ்சபாண்டவர்களில் பெரியோனான தர்மபுத்திரரைக் கேட்டார். நாஸ்தி (இல்லை) யென்ற வசனத்தைக் கனவிலும் கேட்டறியாத அந்த மஹாநுபாவர் அவர்களைப் பலவிதத்திலும் உபசரித்து ஸ்நானத்துக்கு அனுப்பிவிட்டு, மஹா உத்தமியும் பஞ்சபாண்டவர்களின் பத்தினியுமான திரௌபதியை அழைத்துப் பின் வருமாறு கேட்டார்.

தர்மபுத்திரர்:—ஹே! திரௌபதே! இப்பொழுது இங்கு வந்து நதிக்கு ஸ்நாநத்துக்குப் போயிருக்கிறவர்கள் யாவரென்று உனக்குத் தெரியுமா? அவர்களே துர்வாச மஹரிஷியும் அவருடைய சிஷ்யகோடிகளும். இன்னும் க்ஷணப்பொழுதில் அவர்களெல்லோரும் போஜநத்திக்காக இவ்விடம் வருவார்கள். நாம் இப்பொழுது அடைந்திருக்கும் துர்ப்பாக்கிய தசையில், என்ன செய்வது என்று தோன்றவில்லை. பகவான் அநுக்கிரஹித்த அக்ஷய பாத்திரத்தையோ அகாலத்தில் எடுக்கவும் உபயோகிக்கவும் கூடாது. போஜனம் செய்து வைக்காவிட்டாலோ துர்வாச மஹரிஷி கோபத்தினால் நம்மை நிச்சயம் சபிப்பார். ஆகையால் இந்த மஹத்தான ஆபத்தினின்றும் தப்புவிக்க உனக்கு ஏதாவது தோன்றுகிறதா? சொல் என.

திரௌபதி:—ஹே! பிராணகாந்தா! இவையெல்லாம் பகவான், கண்ணன் திருக்கூத்தேயொழிய வேறொன்றுமில்லை. ஆகையால் அந்த ஆபத்பாந்தவ, அநாதரக்ஷக, பக்தபராதீன, ஹிருதயகமலவாஸியான், பகவான் கோபாலகிருஷ்ண பரமாத்மாவினுடைய அநுக்கிரஹத்தைத் தவிர வேறொன்றும் பயன்படாது. ஆகையால் அதைத்தவிர வேறு வழியில்லையென்றே தோன்றுகிறது, பிராணநாதா!

தர்ம:—ஹே! பிரியே! எனக்கும் அவ்விதமேதான் தோன்றியது. ஆனால் ஸ்திரீகளென்றால் யாரும் சீக்கிரமே அநுக்கிரஹிப்பார்களாகையால் அந்தக் கருணாமூர்த்தியும் ஸ்திதி கர்த்தாவுமாகிய பகவானை, நீயே பிரார்த்தித்து சீக்கிரமே எல்லாம் சித்தம் செய்யக்கடவாய். மஹரிஷியும் சிஷ்ய கோடிகளும் வரும் சமயமும் சமீபித்துவிட்டது என்று உத்தரமளிக்கவே,

திரௌபதி பகவானை தியாநம் செய்ய, அவர் ஓடியே வந்து இவர்கள் அறியாமலே அநுக்கிரஹிக்க பின் வருமாறு திரௌபதியைக் கேட்கத் தொடங்கினர்:—

ஸ்ரீ கிருஷ்ணபகவான்:—ஹே! பாஞ்சாலி! நான் மிகவும் சோர்வடைந்து பசி, தாகத்தினால் துன்ப முறுகிறேன், ஏதேனும் கொடுத்து அதனை நிவர்த்திப்பாயாக.

திரௌபதி :—ஹே! ஸ்வயம்பிரகாச, ஸச்சிதாநந்த, சர்வலோக சரண்ய, சர்வநியந்தா வாகிய பகவானே,! தங்களுக்குப் பசியும் அதை நிவர்த்திப்பாரும் இவ்வுலகினுண்டோ! ஹே! தீனபந்தோ! நாங்கள் இப்பொழுது அடைந்திருக்கும் மனக்கவலையைத் தீர்த்து எங்களை அநுக்கிரஹிப்பீர்களென்று நம்பியிருக்க இவ்விதம் சோதித்தல் தகுமோ? ஹே! கபடநாடக சூத்திரதார, மாயக்கண்ணா! இனியும் தாமதியாது நதிக்குப் போயிருக்கும் துர்வாச மஹரிஷி தன் சிஷ்யகோடிகளுடன் இவ்விடம் பிக்ஷைக்கு வருமுன் எங்கள் கவலையைத் தீர்த்தருளவேண்டும் பிரபோ!

ஸ்ரீ கிருஷ்ணன் :—உன் கதையெல்லாமிருக்கட்டும். என்னால் ஒரு நிமிஷம் கூட இனித்தாங்கமுடியாது. ஆகையால் ஏதாவது உடனே கொடுப்பாய். இல்லாவிடில் அக்ஷய பாத்திரத்தையாவது என்னிடம் கொண்டுவா. அதில் என் அதிர்ஷ்ட வசத்தால் ஏதாவது தவறியிருந்தால் அதையாவது புஜிக்கிறேன்.

திரௌபதி:—ஹே! கிருஷ்ணா! தாங்களிவ்விதம் செய்வது நியாயமும் தர்மமுமல்ல. அக்ஷயபாத்திரத்தை நான் சுத்தம் செய்து வைத்தேன். அதில் யாதொன்றும் தவறியிராது. தவிர அதை அகாலத்திலும் நினைத்த சமயங்களிலெல்லாம் எடுக்கவும் கூடாதென்பது நீர் அறியாததா? என் இந்தச் சோதனை? இதுவே உம்முடைய வழக்கம். முன் வஸ்திராபஹரண சமயத்திலும் இவ்விதமே, அந்த துர்ச்சாசனன் முதலான பாபிகளுக்கு இடங்கொடுத்து பிறகு காப்பாற்றினீர். இப்பொழுது அவ்விதம் செய்ய முடியாது. துர்வாச மஹரிஷி மஹாகோபி. உடனே சபித்துவிடுவார். ஆகையால் தாமதியாது அநுக்கிரஹிக்க வேண்டும் பிரபோ!

உடனே திரௌபதியைக் கவனியாது கிருஷ்ண பகவான் அக்ஷயபாத்திரத்தை எடுத்துப் பார்க்க, அதில் ஒரு கீரை இலை தவறியிருக்க அதைச் சாப்பிட்டு தான் திருப்தியடைந்து, வந்த மஹரிஷியையும், அவருடைய சிஷ்யகோடிகளையும், இன்னும் மூவுலகங்களிலும் உள்ள சகல ஜீவகோடிகளையும் திருப்தியடையச் செய்து பின் பாஞ்சாலியைப் பார்த்து பின்வருமாறு பேசத்தொடங்கினர்.

ஸ்ரீகிருஷ்ணன்:—ஹே பாஞ்சாலி! என் மனோபீஷ்டம் நிவிர்த்தியாய்விட்டது. இனி நீ சொல்லவேண்டிய விஷயத்தைச் சுகமே சொல்லலாம்.

திரௌபதி:—ஹே! சர்வஙியந்தாவாகிய பிரபோ! தாங்கள் றியாதது ஒன்றுமில்லையாயினும் சொல்லுகிறேன் கேளுங்கள்.

நடுநிசியில் துர்வாச மஹரிஷி தன்னுடைய சிஷ்யகோடிகளுடன் வந்து போஜனமளிக்கும்படி கேட்டு நதிக்கு ஸ்நானத்துக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் வருமுன் அதைச் சித்தஞ்செய்ய யாதொருவழியும் தெரியாது தங்களைத் தியானித்தேன். தாங்களும் வந்து விட்டீர்கள். ஆனால் அவர்கள் வருமுன் சித்தம் செய்ய அநுக்கிரஹிக்கக் கோருகிறேன்.

கிருஷ்ணன்:—நல்லது, பாண்டவர்கள் எங்கே?

திரௌபதி:—ஹே ஆத்மபந்தோ! அவர்களும் இதே கவலையாகத்தானிருக்கிறார்கள். தாங்கள் வந்தது தெரியாது. இதோ தெரிவிக்கிறேன்.

திரௌபதி போய்ச் சொல்ல எல்லோரும் வந்து கிருஷ்ணபகவானை நமஸ்கரித்து நிற்கிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணன்:—ஹே தர்மபுத்திரா! விஷயம் யாவற்றையும் திரௌபதிசொல்லத் தெரிந்து கொண்டேன். உனது சகோதரன் பீமனையனுப்பி துர்வாசமஹரிஷி, சிஷ்யகோடிகள் எல்லோரையும் உடனே அழைத்துவரும்படி செய். நான் சீக்கிரமே போகவேண்டும்.

உடனே பீமன்போய் அவர்களை அழைக்க,, பகவான் கீரையைப் புஜித்த தக்ஷணமே மூவுலகங்களும் திருப்தியடையு மென்றபடி, அவர்கள் பரம திருப்தியை அடைந்து கேவலம் நடக்கக்கூடமுடியாத நிலையிலிருந்தாலும் பகவானும் அவ்விடம் வந்திருப்பதைத்தெரிந்துகொண்டதினால் உடனே புறப்பட்டு வந்து பகவானைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்கள்.

துர்வாசமஹரிஷி :—ஹே சர்வேசுவரா! யான் பாபியினுடைய அந்நத்தைச் சாப்பிட்ட நிமித்தம் தெரியாது செய்யத் துணிந்த காரியத்துக்காக மன்னிக்க வேண்டும். பகவதநுக்கிரஹம் பஞ்ச பாண்டவர்களுக்குப் பூர்ணமாயிருக்க, அவர்களாலேயே அந்தப் பாபிகள் நாசத்தையடைவார்கள். ஹே! கருணாநிதே! எங்களுக்கு உத்தரவு கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணன் :—நல்லது அவ்விதமே. ஹே பாஞ்சாலி! தர்மபுத்திராதிகளே! யான் போய்வருகிறேன்.

பகவான் போய்விட்டார்.

யோகி :—ஹே சிஷ்யமணிகளே! இதுவே, பகவான் இலையைச் சாப்பிட்டு இஷ்டபூர்த்தியைச் சித்திசெய்தது. இன்னும் மற்ற மூன்று விஷயங்களைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன். இப்பொழுது வசிஷ்டமஹரிஷியின் ஆச்ரமம் போகிறபடியால், நான் வரும்வரை இவ்வாச்ரமம் வரும் பெரியோர்களை முறைப்படி பூஜிக்கவும். தெரியுமா?

(இன்னும் வரும்)

யோகி சுந்தரராஜம்.

நன்மொழி.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

ஈதலறம் தீவினைவிட் டீட்டல் பொருள் எஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

அஹல்யா சாப விமோசநம்.

(4-ம் தொகுதி 449-ம் பக்கத்தொடர்ச்சி.)

பூலோகத்தை வாஸஸ்தானமாயுடைய நம்மைப்போல் ஜகத்திலுள்ள ஏழுலோகங்களையும் தங்களிருப்பிடமாயுடைய அநேகம் ஜீவன்களிருக்கின்றார்கள். புவர்லோகத்திலும் தேகவியோகமாகி புநர்ஜன்மமெடுக்கும் மார்க்கத்திலுள்ள ஜீவன்களைத்தவிர வேறு அநேக ஜீவன்களுண்டு. அநேக தேவதைகள் புவர்லோகத்தையே தங்களுடைய இருப்பிடமாகக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களைத் தவிர வேறநேக பூதவர்க்கங்களு மங்குண்டு. இந்தப் பூதங்களில் சில இயற்கையாகவே ஏற்பட்டுள்ளவை. வேறு சில நம்முடைய விசாரசக்தியால் (Thought Power) ஏற்பட்டவை; மற்றும் சில, பற்பல காரியங்கள் சித்திக்கும்வண்ணம் சூக்ஷ்மலோக ரஹஸ்யமறிந்த சில சித்தர்களால் (white or black) சிருஷ்டிசெய்யப்பட்டவை. கடைசியில் சொன்ன பூதவர்க்கங்களைக் கொண்டுதான் அரக்கர்கள் ரிஷிகள்செய்யும் யாகங்களைப் பங்கப்படுத்துவது வழக்கம். புவர்லோக பூதங்களுக்கு சிவப்பு நிறத்தில் பற்றுதலிருப்பதாகத் தெரியவருகிறது. வீரனிருளன் முதலிய துர்தேவதைகளைப் பூஜைசெய்யு மிடங்களைப்போய் பார்த்தா லிது நன்குவிளங்கும். ஏராளமாக குங்குமத்தை யுபயோகிப்பார்கள்; ரக்தவர்ணமான ஆடைகளையும் புஷ்பங்களையு மர்ப்பணம்செய்வார்கள்; மிருகங்களை வதம்செய்து ரக்தத்தை பூஜாத்திரவியமாக உபயோகப்படுத்துவார்கள். ரக்தவர்ணமிருக்குமிடத்தி லித்தகையபூதங்க ளதிகமாகக் கூடுமென்று நினைக்கவேண்டியிருக்கிறது. மங்களகரமான காரியங்கள் செய்யுங்காலத்தில் சிவப்புவர்ணமான ஹாரத்தி சுற்றுவது நமக்குள் வழக்கமாக இருக்கிறது. அதற்குள்ள அநேக காரணங்களில் மேற்சொன்ன விஷயமும் ஒன்றாக இருக்கலாமென்று நினைக்கிறேன். ஹாரத்தி சுற்றி வெளியே கொண்டுபோகும்போது அம்மங்களகாரியம் நடந்தேறுமிடத்திலுள்ள பூதங்கள் ரக்தநிறமுள்ள அந்த ஹாரத்தித் தட்டையண்டி தாங்களும் வெளியேபோகின்றன. ஆகவே ரக்தநிறத்திற்கும் மேற்சொன்ன பூதங்களுக்கும் ஒருவகை யொற்றுமையுண்டென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஆகையாற்றான் மாரீச ஸுபாஹு முதலிய ராக்ஷஸர்கள் விச்வாமித்திராது

வேள்வி நிறைபெறுவண்ணம் தாங்களுண்டாக்கின பூதங்களங்கே ஒருங்குசேருவதற்காக ரக்தசம்பந்தமான மாம்சத்தையும் ரக்தத்தையும் யாககுண்டத்தண்டை யெறியத்தொடங்கினர்கள். அசுத்தமான இப்பதார்த்தங்கள் யாககுண்டத்தின் சுத்தத்தைக் கெடுப்பதோடுகூடசூக்ஷ்மலோகங்களிலும் பூதங்களைக்கொண்டு அவ்யாகத்திற்கு இடையூறுகளை விளைவிக்கின்றன.

ஸ்ரீராமபிரானிதையறிந்ததும் ஒரு பாணத்தால் ஸுபாஹுவைக்கொன்று மற்றொன்றால் மாரீசனை சமுத்திரத்தினடியிலாழ்த்தி தன் சகோதரனுதவியைக்கொண்டு மற்ற ராக்ஷஸர்களையும் ஸம்ஹாரம் செய்தார். ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கொரேவாக்குத்தான், ஒரே பத்நிதான், ஒரு பாணந்தான். மாரீசனைக்கொல்வதற்காக இட்ட பாணமவனைக் கொல்லாமல்விட்டதைக் கண்டாச்சரியப்பட்டு ஸ்ரீராமன். "ஓஹோ! எப்பொழுதென் முதல்பாணத்திற் கிவனிறையாகவில்லையோ இவனுலிவ்வுலகி லேதாவதாகவேண்டி யிருக்கும்போற்றோன்றுகிறது. இல்லாவிடிலிவன் இறந்திருப்பான்" என்று தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டு மாரீசனையு மப்பொழுது மறுபடியும் கொல்ல முயலாமல் விட்டுவிட்டார்.

ஒருவித விக்னமுமில்லாமல் விச்வாமித்திரருடைய யாகம் முடிவுபெற்றது. முனிபுங்கவருக்குண்டான ஆனந்தத்திற்களவேயில்லை. ராமலக்ஷ்மணர்களைப் பலவாறு துதித்துக் கொண்டாடினர். அவ்விராஜகுமாரர்களும் முனிச்ரேஷ்டருடைய ஸகவாசத்தால் மேன்மையடைந்தனர்.

பரமபாவனரும் ஜீவன்முக்தரும் மிதிலாபுரிமன்னனுமான ஜனகமஹாராஜன் தன்னருமைப்புதல்வியான ஸீதையின் ஸ்வயம்வரநிமித்தம் விச்வாமித்திரரைத் தனது சிஷ்யர்கள் சகிதம் தந்நகர் வரும்படி அழைத்தான். அம்முனிவரும் தனது பிரதம சிஷ்யர்களான அரசிளங்குமரர்களோடு மிதிலைநோக்கிப் புறப்பட்டார். அந்நகர் போகும்வழியி லநேக ஆச்ரமங்களில் தங்கினர்கள். ஆங்காங்கு தங்கி கௌதமராச்ரமத்தண்டை வருங்கால் ராமபிரான் எங்குமுள்ள உத்ஸாஹ மவ்விடத்தில் குறைவுபட்டதுகண்டு கௌசிக முனிவரை நோக்கி, "மஹரிஷே! நாமிதுவரையி லநேக ஆச்ரமங்

களையும், வனங்களையும், தோட்டங்களையும் கடந்திருக்கிறோம். எப்போதும் எல்லாவிடத்திலு மென்மனதிற் குத்ஸாஹ மிருந்து கொண்டே இருந்தது. இவ்விடம் வந்தவுடன் யாதுகாரணம் பற்றியோ என் மனதிற்கொருவித தளர்ச்சி யேற்படுகிறது. இந்த வனமு மொருவகையாகக் காணப்படுகிறது. எங்குமுள்ளதுபோல் பக்ஷிகளி னாரவாரத்தையும் மிருகங்களின் விளையாட்டையும் காணேம். ஜீவசஞ்சாரமற்ற காடுபோல் தோற்றப்படுகின்றது. இதற்கென்னகாரணமென் றென்னிடம் கூறலாமோ? என்று வினவ முனிச்ரேஷ்டர் ராமபிரானுக் கஹல்யையின் விருத்தாந்தத்தை யாதியோடந்தமாக எடுத்துரைக்கலாயினர். கௌதமரது சாபத்தாலும், தான் செய்த பாபத்தைநினைத் துருகிக்கொண்டிருக்கு மஹல்யையின் துக்கத்தாலு மவ்வன மொருவிதமாகத் தோற்றப்பட்டதென்பதையும் நன்கெடுத்துக் கூறினர்.

அச்சமயத்தில் பக்கத்திற்கிடந்த ஒரு பாறை திடீரென்றுருவம் மாறி ஒரு ஸ்திரீயினுருவை மேற்கொண்டது. அதைக்கண்ட ராமபிரான் முனிவரை நோக்கி "இதென்ன ஆச்சரியம்? நீங்கள் சொன்னதிலிருந்திவள்தா னஹல்யையென்று தோன்றுகின்றது. இப்படிப்பட்ட ஜீவனும் தவறிற்ரு?" என்று வினவினர். விச்வாமித்திரர் "அப்பா! இந்த ஜீவனும் தவறிற்று. அப்படித் தவறின பிறகு பட்ட கஷ்டத்தினல் தன் குறையொழிந் திவ்வித உந்நத பதவியை அடையலானள்." என மொழிந்தார். அஹல்யையும் தன் முன்நிற்கும் முனிவரையும் ராமலக்ஷ்மணர்களையும் கண்டளவிலா ஆநந்தங்கொண்டு அவர்களை நமஸ்கரித்து என்னுடைய பாக்கியமே பாக்கியம். பகவானுடைய கருணையை நானென்னவென் றுரைப்பேன்! இவ்வளவுகாலமாக இந்தஸ்வரூபத்தைத் தியானம்செய்து கொண்டுவருகிறேன், இதுவரையில் தியானம் சரியாகவில்லை. ஸ்வரூபம் மனதில் நின்றால் குணதிசயங்கள் மறையும், குணதிசயங்களைத் தியானித்தால் ரூபம் மனம் விட்டகலும். இப்படி சஞ்சலப்பட்டுக் கொண்டேயிருந்தேன். இன்று காலையில்தா னெனது தியானம் நிலைபெற்றது. ஒருக்ஷணமும் தவருது ஸ்வரூபம் குணதிசயங்களெல்லா மென் ஹிருதயத்தில் விளங்கின. அப்போ தெனக்குண்டான ஆநந்தத்தை நானென்னவென் றுரைப்பது! "நான் சபிக்கப்

பட்டிருந்தா லென்ன? எனக்கு சாபவிமோசனமே வேண்டாம், எப்போது மிந்தமாதிரியே எனது ஹிருதயம் தியானத் திலிருந்தாற் போதும் என்று நினைத்தேன். இவ்வாநந்தத்திற்குக் காரண பூதமாயிருக்கு மென் பர்த்தாவின் சாபத்தை மெச்சினேன், கண்விழித்தெழுந்தேன், எந்த ஸ்வரூப தியானத்தாலவ்வித ஆநந்தமடைந் தேனோ அந்த ஸ்வரூபத்தை ஸாக்ஷாத் காரம் செய்தேன். எனக்கினி இப்பிரபஞ்சத்திலாக வேண்டிய தென்ன விருக்கின்றது? எல்லா தபஸ்விகளும் யோகிகளுமெதைக்குறித்து முயலுகிறார்களோ அதை நானடைந்தேன், எல்லா மிந்த கருணாநிதியின் கிருபை. ஸ்ரீ ராமசந்திர மூர்த்தே! கிருபாஸிந்து என்கிற பெயருனக்கே தகும் உனக்கு ஸமானமான தெய்வம் நீயே" என்று ராமபிரானைப் பலவாறு துதிக்கலாயினள். விச்வாமித்திரர் அஹல்யையை நோக்கி, அஹல்யே! நீபெரிய ஜீவன், உனக்குப்பாக்கியிருந்த கர்மங்களெல்லா மொழிந்து விட்டன. இனி யுனக்கிந்த ஜகத்திலாக வேண்டிய தொன்றுமில்லை. உன்பதியான கௌதமர் மஹான்மிக்க பெரியவர். அவரை நீபதியாக அடைந்ததாற்றா னிவ்வித உந்நத பதவியை அடையப் பெற்றாய். உனக்கு சுருக்கமான மார்க்கத்தையுபதேசித்து பின் வரப்போகிற அவதாரங்களிலெது உன் தியானத்துக்குத் தக்கதென்றறிந்து அந்த ஸ்வரூபத்தையு முனக்குபதேசித்து நீயிப்படி யத்யுத்கிருஷ்டமான பதவியை அடையும்படியாக ஏற்பாடு செய்வது அவரைப் போலுள்ள மஹான்களாற்றான் சாத்தியப்படும். எங்களுக்குக்கூட அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியாது. உன் தியானத்திற்குத் தகுந்தது ராமாவதாரமென்பதை யவர் நன்கறிந்தே யுனக்குபதேசம் செய்தார். இப்போதவரிட்ட சாபத்தா லுனக்கு நேர்ந்ததென்னவென்று யோஜித்துப்பார். கணக்கில்லாத ஜன்மங்களை யெடுத்து நீயடையப் போகிற பதவியை இப்போதேயடைந்து விட்டாய். இதை விட வேறென்ன ஒரு ஜீவனுக்கு வேண்டும்? எல்லாமிம் மூர்த்தியினருள்" என்றார்.

அச்சமயத்தில் ஹிமாசலத்தில் தியானத்திலமர்ந்திருந்த கௌதமமுனிவருமங்கு தோன்றினார். விச்வாமித்திரரைவணங்கி, "மஹரிஷே! தங்களுடைய கிருபையாலும் ராமசந்திரமூர்த்தியின் கருணையாலும் அஹல்யை மேன்மையடையப் பெற்றாள். அஹல்யே! என்

வாக்கு நிறைவேறிற்று. நீயடையவேண்டிய பதவியை யடைந்து விட்டாய். அது நீ சுருக்கமான மார்க்கத்தை யனுசரித்ததினுற்றான். பகவான் சகல சுகத்திற்கு மாஸ்பதம். மற்ற பதார்த்தங்களிலுள்ள சுகம் அநித்யம், பின்பு துக்கத்தையேவிளைவிக்கும். அழிவற்ற ஆநந்தம்பகவானிடத்திற்றானிருக்கிறது. இதையெல்லாம்நீநன்றாயனுபவித்தறிந்து கொண்டாய். இம்மூர்த்தியின் தியானத்தாலெவ்வித ஆநந்தமுண்டாகிற தென்பதையு மறிந்து கொண்டாய். இந்தக்கருணாஸாகரத்தின் தயவைப் பற்றி நானென்ன சொல்வது? சாதாரணமாக உலகத்தில் நம்மிடத்திலில்லாத ஒருகுறை மற்றொருவனிடத்திலிருந்தாலவனிடத்தில் நமக்கு ஒரு வித ஜுகுப்ஸை யுண்டாகிறது வழக்கம். இந்த ராமபிரானே நீ யெந்த விஷயத்தில் தவறினையோ அந்த விஷயத்திற் கொஞ்சம்கூடக் குறையில்லாதவர், ஏகபத்நீவிரத மென்ன வென்பதைத் தன் நடத்தையால் ருஜுப் படுத்தப் போகிறார். அப்படியிருந்துமவருக் குன்னிடத்திலேதாவது வெறுப் புண்டாயிற்றா? தயவு, பரிதாபம், கருணை யல்லவா ஏற்பட்டது? உன் மீதவருக்குண்டான இரக்கத்திற் கோரளவுண்டா? ராம சந்திர மூர்த்தே! நீயே திரேதாயுகதெய்வம், உன்னைவிட்டு வேறு கதிகிடையாது." என்று தாசரதியை பலவாறு துதித்து அஹல்யையை மீட்டுக் கொண்டு தன்னாச்ரமம் புகுந்து முன்போலவளோடுகூட லோககைங்கர்யம் செய்யத் தொடங்கினர். விச்வாமித்திரரும் ராஜ குமாரர்களோடு கூடமிதிலைநோக்கிப் புறப்பட்டார்.

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், M. A.

நன் மொழி.

அபக்குவன்.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்.
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே.

குழந்தைகட்கு பிரஹ்மக்ஞானம் போதித்தல்.

1. பிரஹ்மக்ஞான சபையைச் சேர்ந்த நம்முடைய சகோதர சகோதரிகளிற்சிலர் தங்கள் குழந்தைகட்கு பிரஹ்மக்ஞானம்போதியாதிருத்தல் நலமென்ற வியக்கத்தக்க தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம் பின்வருமாறு:—தங்கள் சிறுவயதில் மனதைக்குன்றச்செய்து, அதி துன்பமுறச் செய்ததுமான மதக்கோட்பாடுகள் தங்கள்மேற்சுமத்தப்பட்டு அவற்றின் பந்தங்களின்று விடுவித்துக்கொள்ள அதிக சிரமம் தாங்கள் அடைந்தமையால், தங்கள் குழந்தைகள் வினைத் தெரிந்து, இம்முக்கியமான விஷயங்களைப்பற்றி அவர்களே யோசனை செய்து நிர்தாரணஞ்செய்து கொள்ளட்டுமென்றும், மதசங்கதிகளைப்பற்றி யாதொரு போதனையுமில்லாமல் அக்குழந்தைகளை விட்டுவிடுவது சரியென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இவ்வபிப்பிராயம் அதிகநேர்த்தியாகவும், மேன்மையாகவும், உதாரசுபாவமுடையதாகவும் த்வனிக்கின்றது. ஆயினும் அது ஒரு பெரும் பிழையே. அப்படி விடுவதால் அநியாயமாய் குழந்தைகள் பிற்காலத்தில் துன்பமடைய வேண்டியிருக்கும்.

2. முதலாவது, இவ்வெண்ணத்தை வகிப்பவர்கள் முடியாத காரியத்தை பாவித்துக்கொள்ளுகிறார்கள். ஏனெனில் இவ்விஷயங்களைப்பற்றி யாதொரு எண்ணமுமில்லாமல் ஒரு குழந்தையும் வளருகிறதில்லை. அப்படி வளரவும் முடியாது. அவர்களுக்கு ஏதாவது இப்பெற்றோர்கள் கற்பிப்பார்களானால் உடனே குழந்தைகள் அவர்கள் சொல்வதை யொப்புக்கொண்டு அவ்வாறே ஒழுகச் சித்தமாயிருப்பார்கள். ஆனால் (பெற்றோர்கள்) அவர்கள் ஒன்றும் போதியாமல் விட்டுவிட்டால் குழந்தைகள் தங்களை வளர்க்கும் தாதிகளோ வேலைக்காரிகளோ கூடிவிளையாடும் சிநேகர்களோ, இன்னும் மற்ற விரும்பத்தகாத விடங்களிலிருந்தோ அறைகுறையாய் இவற்றைப்பற்றி இரண்டொரு விஷயங்களை ஸ்வீகரித்துக் கொள்ளுகிறார்கள். இக்காரியத்தை அசட்டையாய் விட்டுவிட்டால், இவற்றைக்குறித்து யாதொரு அபிப்பிராயத்தையும் மனதில் உட்கொள்ளாமல் குழந்தைகள் முதிர்ந்த பருவத்தை யடைகிறதில்லை. இக்காரியத்தின்

பலனாய் கடைசியாய் பலவித தவறான கொள்கைகளை அவர்கள் சம்பாதித்துக்கொண்டு ஸ்வயமாகவே இவர்கள் இவற்றைப்பற்றி விசாரிக்கும் பருவம் வருமளவில், தாங்கள் முன்கொண்ட எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு அவற்றின் படியே சித்தாந்தப்படுத்திக் கொள்வார்கள். இவ்வாறு செய்வதால் அவர்கள் உள்ளவற்றை உள்ளவாறே தெரிந்துகொள்ள இயலாமற் போய்விடுகின்றது.

3. இரண்டாவது, தங்களுக்குக் கிடைத்த ஞானம் தங்கள் குழந்தைகட்கும் கிடைக்கவிடாமற் செய்ய அவர்களுக்கு ஸ்வாதீனமில்லை. காரணமில்லாமல் இக்குழந்தைகள் இவர்களுக்கு உற்பவிக்கவில்லை; ஒரு முகாந்திரத்தைக் கொண்டுதான் இவர்களிடம் இக்குழந்தைகள் ஜனித்தார்கள். இதை ஞாபகத்தில் பெற்றோர்கள் வைக்க வேண்டியதுஅவசியம். அம்முகாந்திரத்தின் முக்கியமானகருத்து, பெற்றோர்கள் இவ்வான்மாக்களுக்குக் கொடுக்கக்கூடிய விசேஷமான பயிற்சி எது உளதோ, அது அவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்பதேதான். குழந்தைகள் அறிவின்மையாலும் மித்தியாசாரங்களாலும் வளர்க்கப்பட்டு வரவேண்டுமென விதித்திருந்தால், வனவாசிகளான தாய் தந்தையர்களிடமாய் அவர்கள் ஜனித்திருக்க வேண்டியவர்கள்; அல்லது வித்தியாவிஹீனர்களான பெற்றோர்களிடம் உற்பவித்திருக்கவேண்டியவர்கள். சாதாரண லௌகிக தர்மமே (Orthodoxy) இவ்வான்மாக்களின் பரிபாகத்திற்கு மிக ஏற்றதாயிருந்தால் அதைப்போலுள்ள பல்லாயிரங்குடும்பங்களிலெங்கேயாவது அவர்கள் பிறந்து அவற்றின் அநுபவத்தைப் பெற்றுவரும்படி அனுப்பப் பட்டிருப்பார்கள். அத்தகைய குடும்பங்களிலிராமல், பிரஹ்மக்ஞான முறையைக் கைப்பற்றும் பெற்றோர்களிடம் அவ்வான்மாக்கள் ஜனிக்கநேர்ந்த விஷயமானது, பிரஹ்மக்ஞான தர்சனமளிக்கும் அத்தியற்புத சௌகர்யங்களையடைந்து அனுபவிப்பதற்குரிய ஸ்திதி அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றதென்பதைக் காண்பிக்கின்றதன்றோ ? அச்சௌகரியங்களை யடையுமாறே அவர்களிங்கு வந்திருப்பது. ஆனதால் தங்களுக்குக் கிடைத்த பிரயோஜனம் இவ்வான்மாக்களுக்கும் கிடைப்பதைத் தவிர்க்க தாய் தந்தையர்கட்கு என்ன அதிகாரம் ஏற்பட்டது?

4. ஓர் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்ததென நாம் பாவித்துக்கொள்வோம். அப்படிப்பிறப்பது பெற்றோர்களுக்கு புகழ்க்குரிய ஓர் விஷயம். ஓர் கௌரவம். எப்படியெனின், அது கர்ம தேவதைகளால் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் ஓர் பொறுப்பு என்றே கருதப்படவேண்டும்; அல்லது இவ்வான்மாவே பூர்வ ஜன்மாந்தரங்களில் அவர்கள்பாற்கொண்ட அன்பின் பலனைப் இப்பிறப்பில் தன் உபாதிகளை (சரீரங்களை) சாதகப்படுத்தித் தரும்படியாய் தானே தேர்ந்தெடுத்துப் பூர்ண நம்பிக்கையுடன் தன்னையே அவர்களிடம் ஒப்புவித்திருக்கிறது என்றும் நாம் கருதலாம். இவ்வுத்தரவாதம் மிகவும் சிரமமானது. ஆனதால் அப்படி உத்தரவாதம் ஏற்படும் ஒவ்வொருவரும் தமக்குக்கிடைத்த கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்படியாய் நடந்துகொள்ளக்கடவர்.

5. குழந்தைகளின் சரீரபோஷணை, வளர்ச்சி, இவைசம்பந்தமாய் மாத்திரமல்லாது, நீதி நெறியிலும், புத்தி விருத்திசெய்யும் முறையிலும் பெற்றோர்களொவ்வொருவரும் தம் பூர்ண சக்தியை உபயோகித்து அவர்களைக் கவனித்தல் வேண்டும்; ஆனால், தங்களுக்கு மகா அருமையானதும் தங்கள்வாழ்க்கையை லகுவாயும் சந்தோஷமாயும் செய்கிறதுமான ஞானத்தை அவர்கட்குப் புகட்டாது விட்டுவிட்டால், தங்கள் பூரண சக்தியையும் உபயோகித்து குழந்தைகள் க்ஷேமத்தின்பொருட்டு இவர்கள்உழைத்தவர்களாவார்களா?

6. மூன்றாவது, தாங்கள் அளிக்கக்கூடிய போதனைகளை ஏன் கொடுத்தல் அவசியமெனக் காட்ட மற்றொரு முக்கியமான காரணமுமிருக்கிறது.

குழந்தைகட்கு விவரந்தெரிந்து, விஷயங்களைப்பற்றித் தாங்களே யோசிக்கும் சக்தி வந்துவிட்டதென்று நாம் நினைக்கும் காலத்திற்கு முன்னமேயே, அவர்கட்குப் பலவித கஷ்டங்களும் சோதனைகளும் ஏற்பட்டிருக்கும். அத்தொந்தரவுகளெல்லாம் எவ்வழியில் அவர்கள் நிவர்த்திக்கப் பார்க்கின்றார்களோ, அவ்வழியைப்பொறுத்தே அவர்கள் வாழ்க்கை முழுமையும் பிற்காலத்தில் அமையப்பெறலாம். ஆகையால், இச்சந்தர்ப்பங்களில் அத்துன்பங்களிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ளும்படியாய் பிரஹ்மஞ்ஞான மளிக்கக்கூடிய

மதிக்கப்பெறாத நன்மைகளை அவர்கள் பெறுவதற்கில்லாமல் செய்ய தாய்தந்தையர்களுக்கு என்ன அதிகாரம் ஏற்பட்டது? பிரஹ்ம வித்தையாகிய பரவித்தை கொடுக்கக்கூடிய தெளிந்த உபதேசங்கள் தங்களுக்குக் கிடைக்காமல், எவ்வளவோ சிறுவர்கள் வாழ்க்கை பாழடைந்து போயிருக்கிறது. ஆனதால், நமதருமைக் குழந்தைகளை அவ்வாபத்துகளுக் குள்ளாக்குவது பெரும் பிழைமாத்திரமல்லாமல் துணிகரமான தீமைச்செயலென்றே ஆகும்.

7. நான்காவது, நாம் பிரஹ்ம வித்தையை பெரும்பான்மையோர் வைதிகமாகக் கருதும் (Orthodoxy) முறைக்கு ஒப்பிடுவது பொருந்தாது. பின் சொன்னதோ மனதைக் குன்றச்செய்து, மந்தப்படுத்தி துன்பமுறச் செய்வதாயிருக்கிறது. ஆனால், பிரஹ்ம வித்தையோ அவற்றிற்கெல்லாம் நேர் விருத்தமானது. அது நம்முடைய புத்தியை அவியச்செய்கிறதில்லை; ஆனால் அதைதீக்ஷ்ணமாக்கி பூரணப் பிரயோஜன முள்ளதாய்ச் செய்கிறது. உலகிலுள்ள சந்தோஷம், அழகு இவற்றின் உணர்ச்சியை நசிக்கச்செய்யாமல் அவற்றை அதிகரிக்கச்செய்கிறது. நல்மதி விவேகம் இவற்றிற்கு ஒத்ததே பிரமஹ்வித்தை. ஆனதால், நாம் அதில்மறக்க வேண்டியவிஷயமே ஒன்றுமில்லை. எனவே அது நம்மிடமிருத்தல் நன்மையே தவிர வேறாகாது.

பிற்காலத்தில் உங்கள் குழந்தைகளுக்கு அகண்ட தத்துவத்தின் ஓர் உருவமெனக் கருதத்தக்க பெரிய மதங்களிலொன்றில் எக்காரணத்தைக்கொண்டாவது, அபிமானம் ஏற்படுமானால், பாலியத்தில் அவர்கள் கற்ற பிரஹ்மவித்தை அவ்வுண்மையைத் துப்பற விளக்கிக்கொடுக்கும். சிறுவயதில் அச்சௌகரியங்களில்லாதவர்களுக்கு அம்மதத்தின் உண்மை எப்படிப் புலப்படுமோ, அதைப் பார்க்கிலும் அதிக சிரேஷ்டமான அறிவை அம்மார்க்கத்தின்கண் உங்கள் குழந்தைகளுக்கு உண்டுபண்ணும். ஆகவே, எவ்வழியிலும், தங்களுக்குப்பிராப்தி வசத்தால் கிடைத்திருக்கும் அற்புத பாக்கியங்களைப் பெற்றோர்கள் தங்கள் மக்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டியது பெருங்கடமை.

8. நிற்க, மற்றும் சில பெற்றோர்கள் பிரஹ்மஞானத்தை தங்கள் மக்களுக்குக்கற்பிக்க பிரீதியாயிருந்தும், எப்படி அதைத்துவக்குவது என்று யோசனைசெய்கின்றார்கள். "பிரஹ்மஞானதத்துவங்கள் எங்களுக்கே விளங்குவது அதிப்பிரயாசையாய் இருக்கின்றன, குழந்தைகள் சிற்றறிவுக்குப் புலப்படும்படி நாங்கள் எப்படி அவற்றைப் போதிக்கமுடியும்?" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

9. குழந்தைகளுக்கு அவற்றைப்பற்றி போதிக்கமுடியுமாவென்ற சந்தேகம் உங்களுக்கு வேண்டாம். ஏனெனில் குழந்தைகள் உங்களைவிட ஈசனுக்கு நெருங்கி யுள்ளவர்கள். ஆனதால், உங்கள் திகைக்கும் புத்திக்கு எட்டாத விஷயங்கள் அவர்களுடைய மேலான ஞான சிற் சக்திக்கு (Intuition) உள்ளங்கை நெல்லிக்கனிபோல் சிலசமயம் விளங்கும். ஆயினும், நாம்போதிக்குங்கால், முக்கியமான விஷயங்களெவை முக்கியமல்லாதவைகள் எவை எனப் பகுத்தறிந்து, நாம் மனதில் கொண்டிருக்கும் கொள்கைகளை ஒழுங்கானபடி கற்பித்தல்வேண்டும். அண்டவர்க்கங்களைப் பற்றியும், வட்டங்களைப்.பற்றியும் (Rounds) கிரகத் தொடர்களைப் பற்றியும் (Planetary chains) அல்லது லோகங்கள், அவற்றின் உட்பிரிவுகள் அவற்றின் குணங்கள், இவைகளைப்பற்றியும் முதலில் அவர்கட்கு எடுத்துச் சொல்வது சரியாகாது. அவையெல்லாம் முக்கியமானவையே, காலக்கிரமத்தில் அவற்றையெல்லாம் நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்கலாம். முதல் முதலாய் வெண்டாமறை நாளைப்பற்றிய கதையானது "(The Idyll of the White Lotus) என்னும் புத்தகத்தில் காட்டியுள்ளமூன்று பெரும் தத்துவங்களை நீங்கள் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்.

10. அவையாவன, (1) ஈசன் எந்நாளுமுளர், அவர் பரம சத்குணம் பொருந்தியவர். (2) ஆன்மா அவர் அம்சத்தைப் பெற்றவனாய்க் கொண்டு சாசுவதத் தன்மையுள்ளவன், மறிக்காதவன். (3) தர்மம், அதாவது நீதியே உருவாயுள்ள வுலகில் நாம் வசிப்பதால் நாம் பிறர்பால் எதை விளைவிக்கின்றோமோ அதையே நாம் திரும்பவும் பெறுகின்றோம். முன்சொன்ன புத்தகத்திற்கூறிய

வண்ணமே இத்தத்துவங்கள் உயிர் வாழ்வின் மேன்மைக்கு இன்றியமையாதவையாக அவ்வளவு பெருமை வாய்ந்தனவாயினும், ஸாதாரணத்திலும் அதி ஸாதாரணமான மனிதனின் அறிவிற்கும் புலப்படக்கூடிய விஷயங்களே.

11. சில பெற்றோர்கள், "கடவுளைப்பற்றி நாங்கள் எங்கள் குழந்தைகட்கு என்ன சொல்லக்கூடியது? ஈசனைப்பற்றி எங்களறிவே மிகக் குறைவாயிருக்கும் பொழுது, எங்களைவிட ஈசசம்பந்தம் அதிகமுள்ள குழந்தைகட்கு அப்பொருளைப்பற்றி எங்கள்எண்ணங்களைக்குறித்துக் கூறுவது எவ்வாறு?" எனக்கேட்கிறார்கள்.

12. பூரணமாய் கடவுளைப்பற்றி நீங்கள் எடுத்துக் கூறுவது இயலாது. அவரது பெருமையையும் சக்தியையும் பற்றிச் சிறிதளவுதான் உரைக்கக்கூடும். ஆயினும், நீங்கள் குழந்தைகளுக்கு எவ்வளவோ நலம் செய்யலாமென எனக்குத்தோன்றுகிறது; நீங்கள் செய்வது குறைவோ, நிறையோ, அது அவர்களுக்கு மிக உதவியாயிருக்கும். ஆனதால், "ஈசன் அன்புமயமாயேயுளன்" என்ற புராதன நிருபணத்தை அவர்களுக்கு உபதேசியுங்கள். பிரகிருதியிலுள்ள அழகையும், மகிமையையும், அவர்களுக்குக் காட்டுங்கள். மனிதர்கட்குள் அதி உத்தம புருஷர்கள் காட்டியிருக்கும் மேன்மையானகுணங்களையெல்லாம் எடுத்துரைத்து, அக்குணசம்பத்துக்கள் ஒரு பரம்பொருளிடமிருந்து உதிக்கின்றன வென்றும், அவையெல்லாம் அப்பொருளின் ஒரு அம்சமென்றும் விரித்துரையுங்கள். இச்சில்லரை குணங்களுக் கப்பாலும் அவர்கள் ஒரு காலத்திற் சென்று அச்சோதியைப் பிரத்தியக்ஷமாய் தரிசிக்கலாமென்றும் அச்சோதியின் பிரதிபிம்பமே இவ்வுலகில் இக்குண சம்பத்துக்களாய்ப் பிரகாசிக்கின்றன வென்றும், அவர்கட்குப் போதியுங்கள். இப்படிச்செய்தால் ஈசனது வெளித் தோற்றத்தையாவது சற்று அவர்கள் தரிசனம்செய்தவர்களாவார்கள். அவர்கள் எங்கு சென்றபோதிலும் சர்வசக்தியும் சர்வஞானமும் சர்வ அன்பும் அவர்கட்குத் துணையிருந்து வருகின்றனவென்றும் அவையெல்லாம் கடவுளுக்குச் சொந்தமானவையென்றும் (கடவுள் சுபாவத்தை வெளிப்படுத்துவன வென்றும்) எடுத்துக்கூறுங்கள்.

13. நீங்கள் அவர்கட்கு பூரண அன்பும், பிரீதியும்காட்டி, அவர்களைச் சந்துஷ்டர்களாக்கி, அவ்விதம் உங்களிடமுள்ள ஈசனை அவர்கள் முன்பாய் பிரகாசிக்கச் செய்வியுங்கள். அப்பொழுதாவது அவர்கள் உங்களைச் செவ்வனேயறிந்து விசுவாசிப்பார்கள். உங்களிடமாய் வாசஞ்செய்துகொண்டு, உங்களை அன்புக்கு பாத்திரமாய்ச் செய்விக்கும் ஈசனை உங்கள்மூலமாய் நேசிக்க ஆரம்பிப்பார்கள். அவ்விதமே, கொஞ்சம் கொஞ்சமாய் உலகில் அழகானவை எவையோ, நல்லவை எவையோ, உண்மையானவை எவையோ, அவையெல்லாம் ஈசனது தன்மையை வெளிப்படுத்துவன வென்றும், ஈசன் நித்தியானந்த ஸ்வரூபியென்றும்; அவரிடம் சகலமான சாந்தியும், சுத்தமும், பரிபாலன சக்தியும் அடங்கியுள்ளனவென்றும் அறிந்துகொள்வார்கள். வரையறுத்து இவ்விதம்தான் நாம் அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும் என்று நம்மால் சொல்லமுடியாது. ஈசன் அருளால் கிடைக்கும் வாக்கைக்கொண்டுதான் நாம் கூறக்கூடியது. குழந்தைகளின் குணாதிசயங்களையறிந்து, அவற்றிற்குத் தக்கவாறே நாம் யோசித்துக் கற்பித்தல் வேண்டும்.

14. குழந்தைகள் ஈசன் பரமாகவேயிருந்து உழைக்கவேண்டுமென்றும், ஈசனுக்கு சுபாவமாயுள்ள நன்மை, தேஜஸ், மகிமை, பிரேமை, பரசிந்தை இவைகளால் அவர்களுடைய மனம் எப்போதும் நிரம்பியிருக்கவேண்டுமென்றும் அவர்களுக்குப் போதியுங்கள். கஷ்டநிஷ்டூரங்களாலோ, மற்றெந்தக்காரணங்களாலோ, இப்பெரும் விஷயங்களை அறிந்துகொள்ளாதிருக்கும் ஜனங்களுக்கு முன் இக்குணங்கள் யாவற்றையும் அவர்கள் பிரகாசிக்கச்செய்ய வேண்டுமெனவும் உபதேசியுங்கள். உலகத்தில் எங்கெங்கு துயரமும் தொந்தரவுமிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அங்கங்கு நிவிர்த்திக்க ஓர் முயற்சி அவர்கள் செய்யவேண்டுமெனவும், எங்கெங்கு உதவி தேவையோ, அங்கங்கு அவர்கள் தடையின்றி அவ்வுதவிபுரியவேண்டுமென்வும் எடுத்துக்காட்டுங்கள். அவற்றை எல்லாம் எல்லாக் குழந்தைகளும் அதிசுலபமாய் அறிந்துகொள்ள முடியும். இயற்கையிலே குழந்தைகள் சுறுசுறுப்புள்ளவர்களாதலால் நாம் சொன்னவற்றை அப்பியசித்துக்கொண்டுவர சந்தோஷப்படுகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஒரு வேலை செய்துகொண்டே

யிருக்க விருப்பம்; உதவிசெய்யும் விஷயத்தில் வெகு சந்தோஷம்; பிறர்பால் அன்பைப் பொழிந்து அவர்களிடமிருந்து திரும்பவும் அன்பும் விசுவாசமும் பெறுவதற்கு அதிக உற்சாகம்.

15, இவற்றிற்குமேல், மனிதனுடைய அமைப்பைப்பற்றி குழந்தைகளுக்கு கொஞ்சம் சொல்லுங்கள். அவர்கள் பார்க்கும் இந்தஜடம் (ஸ்தூலதேகம்.) ஆன்மாவல்ல என்றும், அது ஆன்மாவின் ஆடையே என்றும், அதனுள்ளிருக்கும் ஜீவன் ஈசனென்றும் பரஞ்சோதியினின்று உண்டான ஓர் சுடரென்றும், அவ்வான்மா நாளடைவில் ஞானத்தில் ஓங்கிவளர்ந்து, அவன் இயற்கையான சக்தியை அறிந்து, எதனிடமிருந்து அவன் தோன்றினானோ அதை நாடியே மேற்செல்லுகின்றானென்றும் விளக்கிக்காட்டுங்கள்.

16. அதன் பின்னர், புனர்ஜன்ம உண்மையை நீங்கள் சுலபமாய் விரித்துரைக்கலாம். எப்படித் தாங்கள் மேலணிந்திருந்த ஆடைகளைக் களைந்துவிட்டு, நித்திரைசெய்து, காலையில் விழித்தெழுந்து, தங்கள் உடுப்புகளை அணிந்து, மறுபடியும் அவர்கள் வேலைக்குச் செல்கின்றார்களோ, அப்படியே ஒரு ஆயுளென்று, நாம் சொல்லுகின்ற ஆன்மாவின் நீடித்த நாளின் இறுதியில், இத்தூல சரீரமாகிய ஆடையை ஜீவன் களைந்துவிட்டு, சற்று களைப்பாறி, அதின் பின்னர் அவன் எழுந்து மறுபடியும் தன் ஆடைகளைத் தரித்து குறையில் விட்ட வேலையைத் திரும்பவும் தொடங்குகின்றானென அவர்களுக்குக் காண்பியுங்கள். தேஹியானவன் ஒருநாளும் உறங்குவதில்லையென்றும், அவன் அறிவைச் சற்றேனும் இழப்பதில்லையென்றும், கொஞ்சகாலத்திற்கோ அல்லது நிலைவரமாயோ தன்னுடைய மேலங்கியைக் களைந்துவிட்டபோதிலும், சூக்ஷ்மலோகங்களில் லோகோபகாரமான தன் காரியத்தைத் தொடர்பாய்ச்செய்து முடிக்க வல்லவனென்றும் எடுத்துரைக்க மறந்துவிடாதீர்கள். அவர்கள் அதிக அன்பும் ஊக்கமுமுள்ள மனத்தோடு ஜாக்கிராவஸ்தையிலேயே (விழித்துக்கொண்டிருக்குங்காலத்திலேயே) விசேஷஉபகார சிந்தனையை வகிப்பார்களானால், தங்கள் ஸ்வப்னாவஸ்தையிலும் (உறங்கும் காலத்திலும்) சரீரம் மரித்த காலத்திலும்கூட அதே சிந்தனையுள்ளவர்களாயிருப்பார்கள் என்ற விஷயத்தை அவர்களுக்கு விரித்துரையுங்கள்.

17. ஏனெனில், சரீரத்தினுள்ளிருக்கும் ஜீவன் சற்றேனும் மாறுதலோ, மாறுதலின் தோற்றமுமோ இலாப் பரஞ்சோதியிலி ருந்து உதித்த சுடராதலால், எக்காலத்திலும் ஒரே தன்மையுள்ள வன். அச்சுடரோ மேன்மேலும் பிரகாசித்து, தெய்வத்தன்மை பொருந்திய ஓர் ஜோதியாய்ப் படரவேண்டும். இதுவும் அவர்கள் கவனிக்கத்தக்கது. அன்பும் பரோபகார சிந்தனையும் நிறைந்த ஒவ் வொரு எண்ணமும் அச்சுடரைப் பெருக்கி அதன் ஒளியை விருத்தி செய்து வருகிறதெனவும், ஆனல் அன்பில்லாததும் சுயநயமு மான எண்ணம் அவர்களிடம் விபரீதமாய் அணுகுமாகில், அச்சுட ரின் தெய்வீகமகிமை அப்போது சற்று குன்றுமெனவும் அவர்க ளுக்குக் கற்பியுங்கள். உலகத்தில் எங்கும் அபிவிருத்தியே நிகழ் ந்து வருகிறதென்றும், அவ்விருத்தியானது மனிதனுக்குமாத்திர மில்லாமல், தாவரஜங்கமாதி சர்வ உயிர்களுக்குங்கூட நடைபெற வேண்டுமென்பதே ஈசன் சங்கல்பமென்றும், ஆனதால் நாம் பிறர்க் குதவிசெய்வது எப்பொழுதும் அவ்விகாசமுறைக் கறுகுணமான ஓர் அதி உயர்ந்தகாரியமென்றும், அது கடவுளுக்குச் சர்வசம்மத மென்றும் போதித்தல் வேண்டும். சோபையும், அன்பும், பரசிந் தையும் எக்காலமும் அவர்களைச் சூழ்ந்திருக்கட்டும். அவ்வாறு நீங்கள் செய்வதால், எப்படி கதிரவன் கிரணங்கள்பட்டு புஷ்பங்கள் விகஸிக்கின்றனவோ, அப்படியே அவ்வான்மாக்களிலிருக்கும் திவ் விய சக்திகளும் விகஸித்து வெளியிற் பிரகாசிக்கும்.

18. உலகத்தில் மஹாஸித்தர்களும், மஹாத்துமாக்களும் இவர்கட்கு மேற்பட்ட புருஷர்களும் இருக்கிறார்களென்றும் இவர்களுக்குப் போதியுங்கள். பெரிய தேவதைகளு மிருக்கிறார் களென்றும், அவர்களுக்குக் கீழேயுங்கூட பிருகிருதியில் சர்வமும் உயிருள்ளவையென்றும் அவர்கள் அறியட்டும். குழந்தைகளது இச்சை, எண்ணம், காரியம் இவற்றின் தன்மைக்குத் தக்கவாறே அக்கணங்களுக்குப் பிரீதியோ, அப்பிரீதியோ உண்டாமென்றும் அவர்களுக்கு எடுத்துரையுங்கள்.

19. நாம் பிறர்க்கு நன்மை விளைவித்தால், நன்மையே நமக் குண்டாமெனவும், விபரீதமாய் நாம் பிறர்க்குத்தீமைவிளைவித்ததால்

தீமையே நமக்குண்டாமெனவும் அவர்களை நீங்கள் அறியச் செய்ய வேண்டும். இந்த நீதியே கர்மம் என்று சொல்லப்படுவது. இப்படிப் பிறர்பால் தாங்கள் செய்வது தங்களுக்கே திரும்பிவருவதால், அவர்கள் தீமை செய்யக்கூடாதென்பதற்கு இது ஒரு முக்கியமான காரணம் ஆயினும், தீமைசெய்யப்படாதென்பதற்கு இதைவிட முக்கியமான காரணம் வேறொன்றுளது. அதாவது, தீமைசெய்தால் அபிவிருத்திக்கு ஹானிசெய்வது, ஜகத்தையாளுகின்ற ஈசனது சங்கல்பத்துக்கு விரோதமாய்ச் செல்வது, ஆனதால் எவ்வுயிர்க்குந் தந்தையான அவ்வீசனுக்குத்துரோகம் செய்வது பெரிய அறிவீனமான செய்கை, ஆனதுபற்றி அதை நாம் ஒழித்தல்வேண்டும் என்பதே. நமக்கு வரும்பயனை உத்தேசித்து மாத்திரம் தீமையைத் தவிர்ப்பது கீழ்க்கடையான தர்மம்.

20. எல்லாவற்றிற்கும் மேலாய் உங்கள் சுபாவத்திலும் வாழ்க்கையிலும் , நீங்கள் எப்படி இருக்கின்றீர்களோ, எப்படி நடந்து கொள்ளுகின்றீர்களோ, நீங்கள் எப்படி குழந்தைகளை நடத்துகிறீர்களோ, அவற்றைப் பொறுத்தேயுள்ளது அவர்கள் அபிவிருத்தி. "கல்வி கற்பிப்பது ஈசுவர கைங்கரிய மாவதெப்படி" என்ற புத்தகத்தையும் "புஷ்பங்களும் தோட்டங்களும், (Flowers & Gardens) என்ற அவ்வதியற்புத சிறுபுத்தகத்தையும் 'வஸ்துக்களின் மறைந்தபாகம், (the Hidden side of things.) என்னும், நூலில், நமக்கும் குழந்தைகளுக்குமுள்ள சம்பந்தம், என்னும் (Our Releation to Children) அத்தியாயத்தில் நான் எழுதியுள்ளவற்றையும் அதிக சாக்கிரதையாய்ப் படியுங்கள். அவற்றையெல்லாம் ஒழுங்காய் அப்பியாசத்துக்குக் கொண்டு வாருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாய் பிரஹ்ம அன்பும் பொறுமையும் காட்டிவாருங்கள். இதுவே பிரஹ்மக்ஞானத்தைப் போதிப்பதற்கு அதிநிச்சயமானதும் தவறாததும் பலிதமுமான்வழி.

21. நான் மேற்கூறிய விஷயங்களெல்லாம் மிகத் தெளிவானவை. எடுத்துரைக்க வெகுசுலபமானவை. குழந்தைகள் இவைகளைக் கிரகிக்கும்படியாய்ச் செய்வதில் உங்களுக்கு ஒருசிரமுமிராது. அவர்கள் அவற்றைக் கிரகிப்பார்களானால் இவ்விஷயங்களை

அவசியம் அப்பியசித்துக் கொண்டு வருவார்கள். ஒரு குழந்தைக்கு அரிய பெரிய விஷயங்கள் தெரிந்திருந்தபோதிலும் அவன் ஒருசமயத்தில் அவனறிந்த நல்வழியிலிருந்து நழுவலாம். அவன் தகப்பனாரும் அவர்காலத்தில் சிலசமயம் தவறினதுபோலவே, அவனும் தவறலாம். ஆயினும் அவனிடமுள்ள பிரஹ்மஞானத்தின் பலனாய் அவன் செய்யும் பிழைகள் மற்றவர்களுடைய பிழைகளைக் காட்டிலும் குறைந்ததாயும் அவன் வாழ்க்கை அதிக ஆனந்தமாயும் சுத்தமாயும் அவன் அபிவிருத்தி அதிகவிரைவாயும் இருக்கும்.

22. பெற்றோர்காள்! இவ்வான்மாக்களுக்கு தங்களுடைய சரீரங்களைச் சாதகப்படுத்தித்தருவது உங்களிடம் ஒப்புவித்த நுண்மையான பெருங்காரியம். நீங்களதைச் செவ்வனேசெய்து முடித்தக்கால் அவர்களின் நன்றியறிவையும் விசுவாசத்தையும் பெறுவீர்கள்.

உங்கள் கடமையை நீங்கள் சீராய்ச் செய்துமுடிக்கத் திருப்தியுமுண்டாகும். ஒரு நற்காரியம் நாம்செய்தால் அதன்பலனாய் மேன்மேலும் நற்காரியங்கள் செய்ய நமக்குத்தருணம் கிடைக்குமாதலால் நீங்கள் புரிந்த உதவிக்குப் பலனாய் இன்னும் பெரியகாரியங்களைவகிக்கும் கௌரவம் உங்களுடையதாகும். இவ்விதமே நீங்களும் உங்கள் குழந்தைகளும் ஈசன் காரியத்தை அவருடன் கூடவிருந்து நடாத்தும் புண்ணிய புருஷர்களாகலாம். உங்கள் குழந்தைகளும், அம்மஹோன்னதமான காரியத்தில் அதிவல்லமையுடன்உழைப்பவர்களாய்க் கொண்டு ஜகத்குருவானவர் அவதாரஞ் செய்யுங்கால், அவரால் லோக ஸம்ரக்ஷணத்தின் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படலாம். அப்போதுதான் "ஞானமுள்ளவர்கள் வானவெளியின் சோதியைப்போலப் பிரகாசிப்பவர்கள், ஆனால் மற்றோர்களைச் சன்மார்க்கத்தில் நடத்துவார்களோ நக்ஷத்திரங்கள் போல எக்காலமும் பிரகாசிப்பவர்கள்" என்ற தீர்க்கதரிசிகளின் சிறப்போங்கிய வசனம் நிறைவேறப்பெறும்.

ஓம் தத் ஸத்

R. பஞ்சாபகேச ஐயர்.

மனிதனும் கடமையும்.

நெடிய கடல் சூழ்ந்த இவ்வுலகத்திற் காணப்படுவனவும் காணப்படாதனவுமாய் உயிர் வாழ்கின்ற தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவர மென்னும் எழுவகைப் பிறப்பாலாகிய எண்பத்து நான்கு லக்ஷ ஜீவபேதங்களுக்குள்ளும் மனிதப்பிறப்பே சிறந்த தென்பதையும், அதினும் கூன், குருடு, செவிடு, பேடு, நீக்கிப் பிறத்தலரி தென்பதையும், அவ்வாறு பிறந்திடினும் புண்ய பாபங்களைப் பகுத்தறிந்து குற்ற மற்ற நீதி மார்க்கத்தில் நடத்தலரி தென்பதையும், அவ்வண்ணம் நடந்தாலும் ஈதல், இரக்கம், உள்ளத்துறவு முதலிய குணங்களைப் பெறுதல் அரிதென்பதையும், நமதனுபவத்தாலும், "அரிதரிது மானிடராதல் அரிது" என்றும் "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி தான் யாதினும் அரிது அரிது காண்" என்றும் "கடல் உலகில் வாழும் உயிர் எழு பிறப்பினுள் மிக்க காட்சி பெறு நர ஜென்மமாய்க், கருதப்பிறத்தல் அரிது" என்றும் கூறப்பட்டிருக்கிற ஆன்றோர் வாக்கியங்களாலும் அறிகிறோம்.

ஒரு ஜீவன் முதலில் கல், மண், புல், பூடு, மரம், புழு, எறும்பு, ஈ, மிருகமாதி யனவாய்ப் பரிணமித்து, அதன் பின் மனிதனாய் விகாசம் பெறுகின்றானென்றும், அதில் நின்று மேல் நோக்கிச் செல்வதற்கு அறிவாற்றல்களை அடையுமாறு, பொன்னைப் புடம்போடுவதால் மாற்றுயர்வது போல, இப்பூலோகத்திலேயே நாளடைவில் ஒரு குடும்பத்திற்குத் தலைவனாகவும், கிராமாதிகாரியாகவும், சிற்றரசராகவும், சக்ரவர்த்தியாகவும், அசுத்த அணுக்கள் ஒழிந்து சுத்த அணுக்களால் ஆபதும், படிப்படியாய் உயர்ந்ததுமான பல சரீரங்களை எடுத்து, அனைத்தாய ஜீவபேதங்களையும் அடக்கி ஆண்டதனாற் சித்த சுத்தி பெற்று, பின்னர் பூலோக, புவர்லோக, ஸுவர்லோக, மஹலோக, ஜனலோக, தபோலோக சத்யலோகாதிபத்ய மடைகின்றானென்றும், இதுவே ஒரு ஜீவனது மோக்ஷ சோபான மென்றும், புராதன மஹரிஷிகளின் வாக்கியங்களாகிற உபநிஷத்துக்களும் அம்மஹரிஷிகளின் உத்திரவுப்படியே தாம் கைக்கொண்ட நற்காரியங்களுக்கு, "ச்ரேயாம்ஸி பஹு விக்நாநி" என்றபடி இடையிடையே நேர்ந்த பற்பல இடையூறுகளையும் பொருட்படுத்தாது, புவனி விகாஸத்தின் பொது நன்மையே புண்ணியமெனக் கருதி,

இடையறாது இரவு பகலாய் உழைத்தவரும், இன்னும் உழைத்து வருபவரும் "பிரஹ்மக்ஞான சங்கத்தின்" அங்கத்தினருமான மாது ஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் அவர்களும், மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார் அவர்களும், C. W. லெட்பீடர் அவர்களும், நிகழ் கால வருங்கால விவேகிகளினது பேரறிவிற்குச் சிறிதும் மாறுபடாததும், அனைவருடைய யுக்தி அநுபவங்களுக்கு ஒத்ததும், தமது ஸ்வாநுபூதியில் உதித்ததுமான பற்பல அரிய பெரிய விஷயங்களோடு, வேதாகம இதிகாஸ புராண தர்ம சாஸ்திரங்களில், ஆங்காங்கு இலை மறை காய் போன்று புதைந்து கிடந்த தத்வார்த்தங்களையும் திரட்டி வெளியிட்ட, குப்த சாஸ்திரம் (Secret Doctrine) முதலிய நூல்களும் கூறுகின்றன.

மோக்ஷ சோபானத்தி னிமித்தம் பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற நாம், அறிதற்கரிய விஷயங்களாகிய காலத்திற் கேற்ற்சுருதி யுக்திகளையும், அவ்வழி யொழுகும் ஆன்றோர்களது அபிப்பிராயங்களையும், உயிர்க்குயிராய் உறைந்தருளும் பெருங் கருணைத் தடங் கடலாகிய பரம பிதாவின் உலகரக்ஷணத்தையும் ஐயந்திரிபற வுணர்ந்து, அதன்படி நடந்து, அவ்வநுபவத்தால் மற்றையோரையும் நடக்கச் செய்வோமானால் நாமே மனிதன். (I)

மனிதர்களாகிய நாம் நாளடைவில் ஈன்ற தாய் தந்தைகளையும், மனைவி மக்களையும், சுற்றத்தார்களையும் பாது காத்தற்கும், பரோபகாரமாகிய உலக விகாசத்தின் பொருட்டு உழைத்தற்குமே, பரம பிதாவாற் படைக்கப்பட்டோமென நினைத்து; (மாதருதேவோபவ பிதருதேவோபவ)*மாதா பிதாக்களை தெய்வமாகநினைத்து உபாஸி என்ற உபநிஷத் வாக்கியங்களையும் "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம், தந்தைசொன் மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை, தந்தை தாய்ப்பேண்" என்ற ஔவைப்பிராட்டியின் அமுத மொழிகளையும் ஒத்து நோக்கி அவைகளின் தத்வார்த்தங்களை ஆராய்ந்து தாய் தந்தையரைப் பாதுகாக்க முன்வரவேண்டும்.

ஒருவன் செய்த ஓரற்ப வுதவியைப் பெற்றவன், அவனுயுள் உள்ளளவும் நினைக்க வேண்டுமென்பது ஆன்றோர் கூற்று. அறி

* தைத்திரீய உபநிஷத்து சீக்ஷாவல்லி 11-வது அநுவாகம்.

வாற்றலையுடைய நமக்கு (நம்முயிர்க்கு) உயர்வற உயர்ந்த இத்தநுகரண புவனபோகாதிகளைக் கொடுக்க நமது தாய் தந்தைகள் பட்டபாடுகளையும் அவர்க்குச் செய்ய வேண்டிய பிரதி உபகாரங்களையும் கவனிப்போம்; நாம் உண்ணும் உணவில் ஒரு சிறிது அதிகப்படும்போது அதனாலடையுந் துன்பத்தை நாமே அறிவோம். அவ்வாறிருக்க, அன்னையோ! நமது சரீரத்தை பத்துமாத காலம் சுமந்து பரிதபித்துப் பெற்று, பாலூட்டி, பருவத்தால் வந்த பல நோய்க்கும் தான் பரிந்து மருந்துண்டு பற்பல தெய்வங்கட்கும் பாடு கிடந்து வளர்த்தவள். தந்தையோ! நம்மைச் சுமந்து பெற்றவளையும் நம்மையும் பாழ்த்த பசிநோய் பற்றுவண்ணம் பாதுகாக்கவும் நமக்குக் கல்வி பயிற்றுவிக்கவும் காலங்களுக் கேற்பச் சிறுபோதிலேயே கலியாண மென்னுங் கால் விலங்கு பூட்டுவிக்கவும் எத்துணைபாடு பட்டிருக்க வேண்டு மென்பதை நம்மக்களாலேயே நாம் அறிவோம். இத்தகைய அன்னை தந்தையரைப் பன்முறை வலம் வந்து பணிந்து, அவர் வேண்டுமவைகளை வேண்டியபடி மனமகிழக் கொடுத்து மரணமட்டும் மனக்கலக்க மடையாது பாதுகாப்போமாயின், ஈதெல்லாவற்றினுஞ் சிறந்த புண்ணியமாவதோடு, "சுட்டி மறைத்த கதைபோலாகாது" இதுகண்ட நம்மக்களும் நமக்கு இவ்வாறு இயற்றுவர். பொய்யா மொழியார் "தம்பொரு ளென்பதம் மக்கள்" என்று கூறியபடி நம்மக்களே நமது பொருள், அவர்களே நம் காலத்திலும் நமக்குப் பின்னும் நமது வேலையை நடத்தற்குரியவர், பயிரிடுவோன் நிலத்தை நன்றாய் உழுது, வரப்பிட்டு, எருப்போட்டு, விதை விதைத்து, தண்ணீர் பாய்ச்சி, களையெடுத்து, ஆடு மாடுகள் மேயாமற் பாதுகாத்து வருவனாயின், அந்தப் பயிர் பிடித்த நிலம் காலத்தில் அவனுக்கு நல்ல பலனைக் கொடுக்குமன்றோ? அதுபோல நாமும் "பருவத்தே பயிர் செய்" என்ற ஒளவைப் பிராட்டியினது அபிப்பிராயப்படி முயலல் வேண்டும். அஃதெவ்வா றெனின், நாமே பயிரிடுவோன். நம் மக்களது நெஞ்சே நிலம், நமதறிவே கலப்பை, அவரது நல்லொழுக்கமே வரப்பு, நன் மாணுக்கரை அவருக்கு நட்பாக்குதலே எரு, நம்மாற் போதிக்கப்படும் கல்வியே வித்து, அதனை மறவாதிருக்கச் செய்தலே தண்ணீர் பாய்ச்சுதல், அவர் மனத்தை கோபலோபாதிகள் பற்றுமல் விலக்குதலே களை களைதல், அடிக்கடி எழும் அகங்கார மமகாரங்களை நீக்கி அவரை நல்வழியிற்படுத்துவதே

ஆடு மாடு மேயாமற் பாதுகாத்தல், இப்படிச் செய்து வருவோமா ஞல் கல்விப் பயிரிட்ட நிலங்களாகிய நமது மக்களால், நாமும், நமது சகோதர சகோதரிகளும் நற்பயனையே அடைவோம்.

நாம் நம்மக்களுக்கு அவசியமான கல்வி கற்பிப்பதோடு தற் கால வருங்காலங்களிற் றெரியவேண்டியவைகளைத் தெரிதற்கும் தம்மோடு பிறர்க்கும் பயன்படூஉம் நற்குண நற் செய்கைகளைப் பெறுதற்கு உரிய வழிகளில் நடத்தி, அவ்வாறு நடக்கும் நம் மக்க ளைப் பொறாமை, கோபம், லோபம், பொய், அகங்காரம், மமகாரம் கொலை, களவு, புறங்கூற லென்னுங் குற்றங்க ளடையாவண்ணம் ஜீவகாருண்யம், சகோதரத்வம், செய்ந்நன்றியறிதல், முதலிய அரிய பெரிய விஷயங்களிற் பழக்கியும், பண்டைக் காலத்து வழக்கவொழு க்கங்களுள் தற்போது தம்மோடு பலர்க்கும் பயன்படுவ துளதாயின் அம்முன்னோர் பிராசீன தர்மங்களைப் பொன்போலப் போற்றி வரு மாறு போதித்தும், தமது உடல், பொருள், ஆவி ஒரு மூன்றும் உலக விகாசத்திற்கே உரியதென நிரூபித்து வரவேண்டும்.

விடுமுறைநாட்களாகிய சனி ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலை 6மணிமுதல் 7மணிவரை நம்மக்களோடு நாமும் அநுஷ்டானுதிகளை முடித்துக் கொண்டு, நாம் செய்துவரும் நித்தியகருமத்திற்கேற்ற காலங்களையும், அதனைச்செய்ய வேண்டிய விதங்களையும், அவ்வச் செய்கைகளுக்கும் மந்திரங்களுக்கும் ஏற்பட்ட தத்துவார்த்தங்களை யும், அவ்வர்த்தக்ஞானத்தால் நீங்கும் தீமைகளையும், அவர் மனத் திற்படியும்படி கூறிவருவோமாஞல், அது, நம்மக்களுக்கும், நம க்கும், நமது குடும்பத்தாருக்கும், நமது சகோதர சகோதரிகளுக் கும், நம்மையாள்வோருக்கும் நன்மையே பயக்குமென்பது சத் தியம்.

மற்றும் நம்மக்களாகிய ஆண்பெண்களிருபாலர்க்குள்ளும் நல் லொழுக்கம், நற்சேர்க்கை முதலியனவற்ருல், ஒற்றுமையும், ஊக்க மும், விடாமுயற்சியும், சகோதரத்வமும், சர்வசமயசமரசசன்மார் க்கமும் நிகழும்படி அடிக்கடி கவனித்துவந்து, நிகழ்கால வர்த்த மானங்களையும் எதிர்கால நிலைமைகளையும் ஒத்துநோக்கி ஒழியா மனவெழுச்சியோடு, உலகவிகாசத்தைக் கருதிப் பெண்மக்களுக் குப் பெரும்பான்மையும், பன்னிரண்டு வயதிற்குமேல், பதினறு வயதிற்குள்ளும், ஆண்மக்களுக்குப் பதினறுவயதிற்குமேல் இரு

பது வயதிற்குள்ளும் அவரவர்களது கொள்கைக்கும் அறிவாற்றல்களுக்கும் மாறுபடாத மணம்புரிவித்தல் வேண்டும்.

அவ்வாறன்றி, ஆஸ்தியையும் அதிகாரத்தையும் சொந்தத்தையும் எதிர்பார்த்து நிர்மூடன், குரூபி, விருத்தன் விதண்டாவாதியாகிய வீணர்களுக்குப் பெண்ணைக்கொடுத்தலும் படிப்பற்றதும், அவலக்ஷணமானதும், அடங்காப்பிடாரியாயுள்ளதும், வேட்போன்கருத்திற்கு வேறுபட்டதுமான பெண்களை வரதக்ஷணை யென்னும் பரதப்பேய் பிடித்து வாங்குதலும் "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்ற ஆன்றோர்வாக்கியம் அடியோடு நாசமடையும்படி நம்மக்களை பாழ்ங்கிணற்றில் வீழ்த்தியதொக்குமேயன்றி அவரது உயிர்வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் சாதகமாகாது.

நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பலவற்றுள்ளும் நம் பெண்மக்களை ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, தமிழ், இங்கிலீஷ் முதலிய பாஷைகளுள், தற்காலத்திற்கு இன்றிமையாத ஆங்கிலத்தில் B. A. வரை எப்பாடுபட்டும் படிக்கும்படிசெய்தல்வேண்டும். அவ்வளவு சாத்தியமன்றாயினும் (School Final) என்னும் மத்யதரக் கல்விப் பட்டமாவது பெறும்படி செய்தால், விவாகம் புரிந்து கொள்வோர்க்கும் அவர் பிள்ளைகளுக்கும் உபகாரமாவதோடு துணைக்காரணமாய்ப் படித்துவரும் ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, தமிழ் முதலியதாய்ப் பாஷைகளுக்கும் தக்கசாதகமாகும். பட்டப்பரீக்ஷை பெறுவதற்குள் பெண்களுக்கு வயது மிகுந்துவிடும், அதன்பின் படிக்க வைத்தல் தகாதென்றெண்ணுகிற தன்மை அடியோடு தொலைவதற்கு சென்னையில் பெண்மக்களுக்குத் தனியே காலேஜ் ஏற்பட்டுவிட்டது. இனி கவர்ன்மெண்டாராலேயே அவர்கட்கு ஆகாராதிகளுக்கும், வசித்தற்கும், படித்தற்குமான இடங்கள் ஒரேகாம்பவுண்டுக்குள், ஏற்படுத்த வேண்டுமென்றும், படிப்பிலும் ஒழுக்கத்திலும் தேர்ந்த பெண்களை உபாத்தியாயர், விசாரணைக் கர்த்தர்முதலிய வேலைகளுக்கும், ஒழுக்க வழக்கங்களையுடைய வயோதிகப் பெண்மக்களை சமயல் சரீரபோஷணைமுதலிய வேலைகளுக்கும் நியமித்து, அக்காம்பவுண்டுக்கு ஒரேவழியும் அதன் வெளிப்புறத்தில் தக்க போலீஸ் பந்தோபஸ்தும் செய்யவேண்டுமென்றும், நாம் ஒவ்வொருவரும் ஆங்காங்கு நடக்கும் (Conference, Congress) கூட்டங்களிற் கதறி கவர்ன்மெண்டாரிடம் அவ்வாறு செய்ய உத்தரவு பெறவேண்டும். கணவனும் மனைவியுமாகிய இருவரும் படித்து "கற்க கசடறக்கற்

பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்றபடி படித்தவண்ணம் நடப்பாராயின் தம்மக்களும் இயற்கையிலேயே அக்கல்வி கேள்விகளைப் பெறுவரென்பதை எவரும் மறுக்கார், ஆதலின் இதுவே மிகவும் சிறந்தது.

மேற்கூறிய முறைகளை நடத்துவதற்காக மனிதப்பிறப்பையடைந்த நாம் மனைவி மக்கள் வீடு வாசல் தனதான்ய வஸ்துவாகனுதிகளாகிய இவ்வுலகானுபவங்களில் மூழ்கி சுவர்க்கானுபவத்தை முன்னிட்டு காம்யகன்மங்களைப்புரிந்து தேவராய் ஜனிப்பது நலமா? அன்றி முன்கூறியபடி நிஷ்காம கன்மத்தால் சித்தசுத்தி பெற்று உலகநடைக்கு உழைத்துவருவது நலமா? என்று ஆராயவேண்டுவது அவசியம். இகலோகபோகம் ஒருவனுக்கு இரும்பு விலங்குபோன்றது. சுவர்க்கலோகபோகமோ? சுவர்ணவிலங்குபோன்றது. ஆகவே இரண்டும் விலங்காதலால் எந்தவிலங்கு நலம்? மனிதனுய் ஜனித்தவன்தான் பூலோகத்திற் செய்தபுண்ணியத்தின் காரியமாகிய போகங்களை சுவர்க்காரோகணத்தால் அநுபவித்துத் தீர்ந்தபிறகும் பூமிக்கேதான் வருகின்ருன். அத்தேவலோகங்களிலும் சுகத்திற்குத் தகுந்த துக்கமும் உண்டென்பர். மனிதப்பிறப்பிலிருந்து நிஷ்காம கர்மத்தினுல் (நிராசையினுல்) இருஷியாகிய ஒருவனுக்குத் தெய்வப்பிறப்பை அடைந்தவன் தாழ்ந்தவனேயன்றி எவ்வாற்ருனும் உயர்ந்தவனுகமாட்டான். ஏனென்ருல் ஆசைக்கடிமைப் பட்டவன் தேவன், ஆசையை அடிமைகொண்டவன் முனிவன் "ஆஶாஶாது ஈஂஷஃவஂநிராஶாதூஈஂவஸஃவஂ" என்றும் "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந் தவா அப்பிறப்பீனும் வித்து" என்றும் "தேசுபழுத்து அருள்பழுத்த பராபரமே நிராசையின்றேற் றெய்வமுண்டோ" என்றும் காணப்படுகின்ற ஆன்ருேர் வாக்கியங்களால் ஆசை எத்தன்மையானும் உயர்ந்த தன்றென்பற விளங்குகின்றது ஆதலின் வெள்ளி அம்பலத்தவராகிய மநு, வேதவியாசர், வசிஷ்டர், பராசரர், சுகர்முதலிய வித்தகச்சித்தர் கணங்கள் விண்ணுலக வாழ்க்கையே வேண்டாது விகாசமுறையின் வேந்தராய் விளங்குவதுயாதினுலென்று ஒவ்வொருவரும் உண்மையை விசாரித்துணர்ந்து ஆசையை முன்னிட்டுவருகிற கோபலோபாதி அகங்கார மமகாரங்களை (யான் எனது என்னும் பற்றுக்களை) முற்றத்துறந்து முனிவராதற்கே முயலவேண்டும். இதுவே உயர்வற உயர்ந்தநமது கடமை ||

ஓம்.தத்ஸத்.

T. R. M. M. சுப்பராமன்.

புத்தக வரவு.

தியாஸஃபியின் நன்மைகள்:—இது சென்னை அடையாறு லைப்ரரியிலுள்ள ஆத்மாநந்தம் என்பவரால் பிரசுரிக்கப்பெற்ற ஒரு துண்டுப்பத்திரிகை, இதன் விலை அணா 1.

சமாசாரம்.

அலகபாத்நகரத்தில் காயஸ்தர் வகுப்பில் சேர்ந்த முன்ஷி காசி பிரஸாத் என்ற ஹைகோர்ட்டு வக்கீல் ஒருவர் 1873 ஆம் வருஷத்தில் 4 லக்ஷம் ரூபாய் பெறுமான தன்னுடைய ஸர்வ சொத்தையும் மூலதனமாக வைத்து ஒரு ஹைஸ்கூல் ஸ்தாபித்தார். அது முதல் அந்த வகுப்பாராலேயே அந்த ஸ்கூல் விசேஷமான பொருளுதவி செய்து ஆதரிக்கப்பட்டு காலேஜாக உயர்த்தப்பட்டது. நம்முடைய பிரஹ்மக்ஞான சபையில் ஊக்கமுள்ளவரும், இங்கிலாந்திற்குப் போய்ப் படித்து உயர்ந்த பரீக்ஷைகள் கொடுத்து தேறிவந்தவருமான ஸ்ரீமான் ஸஞ்ஜீவ ராவ் என்பவர் அதற்குத் தலைவராக நாளிது வருஷத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸமீபத்தில் அந்த காயஸ்த வகுப்பில் சேர்ந்தவரான சந்திர மாதவப்பிரஸாத் என்பவர் சகல செலவும் போக வருஷத்துக்கு 40,000 ரூபாய் வரும்படி வரக்கூடிய தன்னுடைய பூர்ணசொத்தையும் அந்த காலேஜுக்கு நன்கொடையளித்திருக்கிறார். அவருடைய சகோதரி அதுபோலவே ஒவ்வொரு வருஷத்துக்கும் இருபதினாயிரம் ரூபாய் வரும்படிவரக்கூடிய சொத்தை நன்கொடையளித்திருப்பதாகத்தெரியவருகிறது. வித்தியாபரிபாலன தர்மத்தைக்காட்டிலும் சிறந்த தருமம் கிடையாது.

நம்முடைய சென்னை இராஜதானியில் உயர்ந்த படிப்புப் படிக்கப் பிரியமுள்ள பெண் பிள்ளைகளுக்கு பிரத்தியேகமாக கலாசாலைகள் (Women's College) திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் ஒன்றும் மைசூர் ஸமஸ்தானத்தில் ஒன்றும் மட்டும் இருந்தன. அந்தக் குறையை நிவர்த்தி செய்யும்பொருட்டு கவர்ன்மெண்டார் தங்களுடைய செலவில் சென்னைப்பட்டணத்தில் ஒரு ஸ்திரீ கலாசாலை (Women's College) ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது நாளிதுவரு ஜூலைமீ 14உ முதல் சென்னைப்பட்டணம் சமுத்திரக்கரை ஓரத்தில் கேபர்ஹவுஸ் என்னும் கட்டிடத்தில் நடந்துவருகிறது. அந்த கலாசாலைக்கு தலைமை உபாத்தியாயராக (Principal) கல்வியிற் சிறந்த ஒரு ஆங்கிலச் சீமாட்டியை நியமித்திருப்பதாகவும் அயலூர்களிலிருந்து படிக்கவரும் பெண்பிள்ளைகள் இருக்கவும் சாப்பிடவும் ஒரு Hostel ஏற்பாடு செய்திருப்பதாயும் தெரியவருகிறது.

பாச்செலெட் என்னும் ப்ரெஞ்சு வித்வான்ஒருவர் மின்ஸாரத்தின் உதவியால் பூமியில் எவ்விதமான ஆதாரமுமில்லாமல் அந்தரத்தில் ஓடக்கூடிய வண்டித் தொடர் ஒன்று கண்டு பிடித்திருக்கிறாராம். அந்த வண்டித் தொடர் அலுமினியம் என்னும் உலோகத்தால் செய்யப்பட வேண்டுமாம். மணி ஒன்றுக்கு முன்னூறு மைல் வீதம் ஓடுமாம். இந்த வண்டித் தொடர் செய்யவும் ஓட்டவும் ஏற்படக் கூடிய செலவுகள் ஸாதாரணமாய் மற்ற ரயில்வேகளுக்கு ஏற்படும் செலவுகளைவிட மூன்றில் ஒருபங்கு குறைவாகவே இருக்கும் என்றும் தெரியவருகிறது.

கல்கத்தா பம்பாய், மதரூஸ் இந்த மூன்று பட்டணங்களிலும் 1912-ஹுத்தில் மனிதனுடைய ஆகாரத்துக்காக 1,215,438 ஆடுகளும், 112,872 மாடுகளும் 11,024 கன்றுகளும், 2,860 பன்றிகளும் கொல்லப்பட்டனவாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். இந்த 3 பட்டணங்களில் மாத்திரம் ஒரு வருஷத்தில் இவ்வளவு பிராணிகள் நாசத்தை அடைந்திருந்தால், மொத்தத்தில் மனிதன் நிமித்தமாக பிராணிநாசம் எவ்வளவு ஏற்படுகிறதென்று நாம் நிதானிக்கலாம் ஐயோ கொடுமை. அஹிம்ஸையே பரமதர்மம் என்று முழங்கும் அத்வைத மதமும், பௌத்தமதமும், ஜயினமதமும், குடிகொண்டிருக்கும் நம்முடைய நாட்டில், இப்படி இருக்குமானல் மற்ற தேசங்களைப்பற்றிக் கேட்பானேன்.

இப்போது ஹிந்துக்களுக்குள் விவாஹங்கள் நடந்தேறிவருகிற நிலைமையில் அநேக அம்சங்களில் சீர்திருத்தம் செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறதென்று, யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. ஆனல் அதற்கான தீர்மானங்களைச்செய்து அவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர அந்தந்த வகுப்பாராவது, ஒன்றுசேராமல் மேன்மேலும் சீர்குலைந்துகொண்டு வருகிறது. மைசூர் ஸமஸ்தானத்தில் "ஹிந்து விவாஹச்சீர்திருத்த ஸமாஜம்" என்ற ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாகவும், அதில் மைசூர் மகாராஜா அவர்களும், யுவராஜா அவர்களும், மிகுந்த அக்கரை எடுத்துக்கொள்ளுகிருர்களென்றும், அந்தச்சங்கத்துக்குக் காரியதர்சியாக நம்முடைய பிரஹ்மக்ஞான ஸபையில் மெம்பரான ஸ்ரீமான் மகாதேவசாஸ்திரிகளை நியமித்திருப்பதாயும் அவர்கள் அது சம்பந்தமாக மாதாந்தப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுவருவதாகவும் தெரியவருகிறது. அதுபோல ஹிந்துக்கள் அங்கங்கே ஒன்றுகூடி ஸங்கங்கள் ஏற்படுத்தி நடத்தினலன்றி வேண்டிய சீர்திருத்தங்களை எப்படி அடையக்கூடும்?

கல்கத்தாவில், பால்யவிவாக நிவிர்த்தி சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஸங்கத்தார் இந்தியாவிலுள்ள பால்ய விதவைகளின் தொகையைக் கணக்கு எடுத்ததில்,

1-வயதுக்குட்பட்டு	859.
2-வயது முதல் 3-வயது,	1886.
3-வயது முதல் 4-வயது,	3732.
4-வயது முதல் 5-வயது,	8180.
5-வயது முதல் 10-வயது,	78407.
10-வயது முதல் 15-வயது,	227367.
ஆக	320431

பால்ய விதவைகளிருப்பதாக வெளியாகிறது. நாம் பால்ய விவாஹத்தை நிறுத்திவிடும் பக்ஷத்தில் லக்ஷக்கணக்கான குழந்தைகள் இப்படிப்பட்ட கொடுமைக்கு உள்ளாகமாட்டார்கள்.